விலை: 50.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 25 வியாழக்கிழமை (10.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

## 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யக்கூறிய

# சரத் வீரசேகரவுக்கு இந்தியா அவசர அழைப்பு

## அடுத்துவரும் சில தினங்களில் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் பேச்சுவார்த்தை



(கொழும்பு)

இந்தியாவால் அறிமுகம் செய்யப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபை முறையை இரத்துச் செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் இராஜாங்க அமைச்சருமான அட்மிரல் சரத் வீரசேகரவை பேச்சுவார்த்தைக்கு வருமாறு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்பு 13 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருட்கள் கைவசம் வைத்திருந்தவர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் 23

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் ஒருவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

களுத்துறை - வடக்கும் சிறிலந்த சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் குற்றம் சுமத்தப் 23

## தளர்வான கொள்கைகளை கடன்களை வழங்கும்போது கடைப்பிடியுங்கள்

### வங்கித் தலைவர்களிடம் பிரதமர்



(கொழும்பு)

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள மக்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு கடன்களை வழங்கும்போது தளர்வான கொள்கை 23

## யாழ்.நாவற்குழி விகாரை வளாகத்தில் புதிய கட்டடம்

### சத்தமின்றி நேற்று அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவற்குழி - விகாரை அமைந்துள்ள காணியில் பிறிதொரு கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

விகாரைக்கு தேவையான கட்டடம் ஒன்றை அமைப்பதற்காகவே இவ்வாறு கட்டடம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

ஏற்கெனவே 23

## பருத்தித்துறையில் மூன்று கஞ்சா பார்சல் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியிலிருந்து கேரள கஞ்சா அடங்கிய மூன்று பார்சல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையிலுள்ள புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக் 23

## தியாகி திலீபனின் நினைவை முன்னிட்டு

# யாழ்.நோக்கி நடைபெறவிருந்த நடைபயணத்துக்கு அனுமதி மறுப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இரண்டாவது வருடமாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நடைபெறவிருந்த தியாகி திலீபனின் நடைபயணத்திற்கு வவுனியா பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

தியாகி திலீபனின் 33ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா பொங்கு தமிழ் தூபியில் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபவனி 23

## தமிழர் விவகாரங்களில் பிக்குகள் தலையிடாதீர்கள்!

### பாராளுமன்றில் விக்னேஸ்வரன் எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மையில் திருகோணமலை - குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள திரியாய் என்ற இடத்தில் கிழக்கு மாகாணத் தொல்பொருள் செயலணியைச் சேர்ந்த பிக்கு ஒருவர் 1000 ஏக்கர் காணிகளில் இதுவரை காலமும் பயிர் செய்து வந்த தமிழ் விவசாயிகளை குறித்த காணிக்குள் காலடி எடுத்து வைக்கக் 23

## ஐ.நா பிரதிநிதிகள் சபாநாயகருடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதிகள் சபாநாயகரை சந்தித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி 23

# வடக்கில் பௌத்த சிலைகளை அமைக்க வேண்டாம் எனக்கூற விக்னேஸ்வரனுக்கு அதிகாரமில்லை

### எதிர்க்கட்சி எம்.பி டயானா கமகே



(கொழும்பு)

வடக்கில் பௌத்த சிலைகளை வைக்க வேண்டாமென கூற பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின், தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார். 23

## 10 கோடி பெறுமதியான கஞ்சா யாழில் எரித்தழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏறத்தாழ பத்துக் கோடி ரூபாய் பெறுமதி வாய்ந்த 686 கிலோ நிறையுடைய, கஞ்சா போதைப் பொருள் நேற்று எரித்து அழிக்கப் 23

# ஏல விற்பனை

எமது கல்லூரியில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின்போது(2019) ஏல விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் **எதிர்வரும் 18.09.2020 வெள்ளிக்கிழமை காலை 12 மணிக்கு** கல்லூரியின் தென்பகுதி பழைய கட்டடத்தில் ஏலம் விட தீர்மானிக் கப்பட்டிருப்பதால் பொருட்களைப் பெற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமுகமளித்து ஏலத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. தகரக் கதிரைகள் | 60 | 4. மண்வெட்டி | 01 |
| 2. கம்பி மேசைகள் | 30 | 5. குப்பைவாரி | 01 |
| 3. கணனி உதிரிப்பாகங்கள் | -- | 6. போட்டோப்பிரதி இயந்திரம் | 02 |

◆ **17.09.2020** அன்று கல்லூரியில் பொருட்களைப் பார்வையிடலாம்.

◆ ஏலத்தில் எடுக்கப்படும் உரிய பொருட்களினை அன்றைய தினமே உரிய பணப் பெறுமதியினைச் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

(C-274)

அதிபர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,





# ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம். *சுபம்*

கைலாச பிள்ளையார்
கோவிலுக்கு அருகாமையில்
யாழ்ப்பாணம்.

(C-071)

**076 328 7119**


# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# 2020

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதிபுனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 10.09.2020 தொடக்கம் 23.09.2020ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 10.09.2020 திகதியிலிருந்து 23.09.2020ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.**3000/-** (வரிநீங்கலாக)இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 24.09.2020ம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகளில் 1,2 இலக்க கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63(அறுபத்து மூன்று – 26.11.2020) நாட்களும், 3 தொடக்கம் 13 வரையான கேள்விக்கு செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49(நாற்பத்தொன்பது -12.11.2020) நாட்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ். இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் நாட்கள் | வேண்டப் படும் தரம் (வீதி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | சிங்கத்தின் கலட்டி கிளை வீதி - இணுவில் மேற்கு, பரராஜசேகரப் பிள்ளையார் உப வீதி, பாலாவோடை உப வீதி, தாவடி மயான உபவீதி, கே.கே.எஸ் வீதியின் கிளை வீதி (இணுவில் வைத்தியசாலைக்கு முன் வீதி) | 2.611 Mn | 90 | C8 / C7 | 26,500.00 | 25.12.2020 |
| 2 | சோமராந்தோட்ட வீதி – உடுவில் வடக்கு, அம்பலவாணர் வீதி வினிசிட்டி ஒழுங்கை – உடுவில் மத்தி, அம்மையார் தோட்ட வீதி, அமெரிக்கன் பாடசாலை உள் ஒழுங்கை, ஆர்க்வீதி சந்தி திருத்தம் – உடுவில் வடமத்தி. | 2.003 Mn | 90 | C8 / C7 | 20,000.00 | 25.12.2020 |
| 3 | விவசாய வீதி 1ஆம் குறுக்கு ஒழுங்கை – ஏழாலை தெற்கு, வேம்படி அம்மன் வடக்கு வீதி. | 0.919 Mn | 60 | C9 / C8 | 9,500.00 | 11.12.2020 |
| 4 | உண்டியல் பெட்டி வீதி - ஈவினை | 1.197 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 5 | பேச்சியம்மன் குறுக்கு வீதி – குப்பிளான் வடக்கு, குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி, குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி சிவபூமி அருகில் – ஏழாலை தெற்கு | 1.382 Mn | 60 | C9 / C8 | 14,000.00 | 11.12.2020 |
| 6 | ஊரெல்லை வீதி உப வீதி - தாவடி | 1.163 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 7 | சத்தியபுரம் உப ஒழுங்கை – உடுவில், மல்வம் 3ஆம் வீதியின் 1ஆம் குறுக்கு வீதி, கடுகநாவல் வீதி குறுக்கு வீதி – உடுவில் தென்கிழக்கு | 1.172 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 8 | மயிலணி வீதி 1ஆம் குறுக்கு வீதி, வரியப்புலம் 1ம், 2ம் குறுக்க வீதி - சுன்னாகம் நகர் வடக்கு, கதிரமலை குறுக்கு வீதி – சுன்னாகம் நகர் தெற்கு | 1.498 Mn | 60 | C9 / C8 | 15,000.00 | 11.12.2020 |
| 9 | தம்பிமுத்துவாத்தியார் 1ஆம் குறுக்கு வீதி, அம்பனை வீதி - சுன்னாகம் நகர் மேற்கு, தவறணை வீதி – உடுவில் வடக்கு | 1.739 Mn | 60 | C9 / C8 | 17,500.00 | 11.12.2020 |
| 10 | மில் வீதி 1ஆம் குறுக்கு வீதி, மில் வீதி 2ஆம் குறுக்கு வீதி, மேனுசா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒழுங்கை | 0.794 Mn | 60 | C9 / C8 | 8,000.00 | 11.12.2020 |
| 11 | தம்புவத்தை ஞான வைரவர் குறுக்கு வீதி, தம்புவத்தை 3ம்,4ம் குறுக்கு வீதி, உசத்தியோடை 2ம் குறுக்கு வீதி, வேலவளவு குறுக்கு வீதி - ஏழாலை | 1.412 Mn | 60 | C9 / C8 | 14,500.00 | 11.12.2020 |
| 12 | புளியடி வைரவர் 1ம், 2ம் குறுக்கு வீதி, திராளை வீதி – ஏழாலை கிழக்கு | 1.252 Mn | 60 | C9 / C8 | 12,500.00 | 11.12.2020 |
| 13 | சுறாவத்தை சந்தரத்தை வைரவர் ஆலய வீதி, காளிகோவழல் 3ம் குறுக்கு வீதி, ராமத்தின் சீமா ஞானவைரவர் வீதி – ஏழாலை தெற்கு | 0.975 Mn | 60 | C9 / C8 | 10,000.00 | 11.12.2020 |

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 18.09.2020ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்ஷன்,
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்.
**10.09.2020.**

(C-275)


# வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள
எமது கட்டடத்திற்கு
**மேசன், மாபிள் வேலையாட்கள், பெயின்றிங் உதவியாளர் தேவை.**

(3846)

**தொடர்பு : 077 105 6694**


# ஈழத்துச் சீரடியின் இசைப்பனுவல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள மடத்தார்பதி ஈழத்துச் சீரடி சாய்நாதனின் கீர்த்தியைப் போற்றும் பஜனைப் பாடல் இசைப்பனுவல் " ஆனந்த ஆராதனை " வெளியீடு இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஈழத்து சீரடி சாய் மந்திர் பா. ராகவன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் சமயத்தலைவர்கள் கலந்து கொண்டு ஆசி வழங்கவுள்ளதுடன் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் செல்வி ராசமலர் ராமலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சந்திரகுமார் அனுசியா, ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் மகளிர் அணித்தலைவி திருமதி தயாளினி ஜெகதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

# வவுனியாவில் விபத்து
## மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா சாம்பல்தோட்டம் பிள் ளையார் கோவிலுக்கருகாமையில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் காரு டன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து க்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து செக்கடிப்புல வுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர் கள் எதிர்திசையில் வவுனியா நோக்கி வந்த காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கரிகரன், மதுசன், சர்மிலன் ஆகிய மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

கார் பாரிய சேதமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் துண்டங்களாக உடைந்துள்ளது.

**இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் மேற் கொண்டனர்.** (ம-3.299)

# இந்தியாவிலிருந்து கடல் வழியாக நுழைவோரால்

# வடமாகாணம் பாரிய ஆபத்தை எதிர்நோக்கும்

## வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

**இந்தியாவிலிருந்து கடல்வழியாக நாட்டுக்குள் நுழைபவர்களால் வடமாகாணம் பாரிய ஆபத்தை எதிர்கொண்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ் மாவட்டத்தில்கொரோனா நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அண்மை நாடான இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளிற்கு இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருபவர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கடற்கரையை அண்டிய பகுதியில் இலங்கை கடற்படையினரால் விசேட ரோந்து, கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் அண்மையில் தொண்டைமானாறுப் பகுதியில் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்திறங்கிய 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால் இன்னும் எத்தனை பேர் இவ்வாறு சட்டவிரோதமாக வருகை தந்துள்ளார்கள் என்பது தொடர்பில் ஒரு கேள்வி உள்ளது. இது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநராலும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கடற்படையினரின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கின்றது. அதாவது கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள பிரதேச செயலர்கள் தமது பிரதேச மட்டத்தில் கட்டாயமாக கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

தங்களது பிரதேசங்களில் மாதத்திற்கு இரண்டு தடவைகள் அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், கடற்படையினர், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அப்பகுதி பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புகளின் பங்குபற்றுதலோடு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருபவர்களை அடையாளம் காணுமிடத்தில் கொரோனா வைரஸ் ஏனையவர்களுக்கு பரவாதவாறு கட்டுப்படுத்த முடியும்.

இல்லையெனில் பரவுவதைத் தடுப்பது மிகவும் கஷ்டமான விடயம். அண்மையில் நெடுந்தீவில் ஒரு சம்பவம் இடம்பெற்றது.எனினும் பொதுச் சுகாதார பரிசோதகரின் துரித முயற்சியால் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க எதிர்வரும் காலங்களில் கடற்கரையை அண்டிய பிரதேசங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருவோர் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரானா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அத்தோடு வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் இதற்குரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-8)

---

# மின்னஞ்சல் ஊடாக சைபர் தாக்குதல்

# இலங்கை கணனிசார் குழு எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மைக்காலமாக சைபர் மோசடிக்காரர்களினால் மின்னஞ்சல் ஊடாக பாவனையாளர்களின் தகவல்களைத் திருடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை கணனிசார் அவசரநிலைமைகள் தொடர்பான தயார்நிலை குழு எச்சரித்தது.

ஏற்கனவே நன்கறிந்த மின்னஞ்சல் முகவரிகளில் இருந்து தொடர்பற்ற செய்திகள் கிடைக்கப்பெறுவதாக இணையப் பாவனையாளர்களிடம் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக தயார்நிலை குழு தெரிவித்தது.

இவ்வாறான மின்னஞ்சல்கள் பெரும்பாலும் மைக்ரோசொப்ட் ஒபிஸ் சார்ந்த இணைப்பு ஒன்றைக் கொண்டிருக்கின்றது.

பாவனையாளர்கள் அந்த இணைப்பை அழுத்தும் பட்சத்தில், "மாக்ரோ" செயலியைப் பயன்படுத்துமாறு கோரப்படும்.

சைபர் மோசடிக்காரர்கள் இந்த "மாக்ரோ" செயலியின் ஊடாக தீங்கிழைக்கும் கணனி புரோகிராம்களை வடிவமைத்து, அவற்றை மைக்ரோசொப்ட் ஒபிஸ் கோப்பு வடிவில் பாவனையாளர்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள்.

எனவே பாவனையாளர்கள் அந்த மாக்ரோ செயலிக்குள் நுழைவார்களேயானால் அதனூடாக அவர்களுடைய கணனியுடன் இணைப்பை ஏற்படுத்தி, அதிலுள்ள தகவல்களைத் திருடக்கூடிய வாய்ப்பு சைபர் மோசடியில் ஈடுபடுபவர்களுக்குக் கிடைக்கின்றது என்று கணனிசார் அவசரநிலைமைகள் தொடர்பான தயார்நிலை குழு தெரிவித்தது.

ஏற்கனவே நன் கறிந்த மின்னஞ்சல் முகவரி யைப் போன்று காண்பித்து, அதனூடாக அனுப்பப்பட்டிருக்கும் சந்தேகத்திற்கிடமான இணைப்புக்களை அழுத்துவதனை பாவனையாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி தயார்நிலை குழு எச்சரிக்கை செய்துள்ளது. (2-7)

---

# மாகாண சபைகளால் பிரயோசனம் இருந்ததா?

# 13வது திருத்தம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## குழம்பும் வீரசேகர



(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு தனியான பிரேரணை ஒன்றை முன்வைப்பேன் என்றும் அமைச்சு பதவி வகித்தாலும் 13 ஐ இல்லாமலாக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது என்றும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஆளும் தரப்பு பாராளுமன்ற குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போதே 13 ஆவது திருத்தம் இல்லாமலாக்கப்படவேண்டியதன் தேவை தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்திற்கு எதிராக ஆளும் தரப்பு பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் எனது நிலைப்பாட்டை தெளிவாக தெரிவித்தேன்.

13 ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட உள்ள நிலையில் 13ஆவது திருத்தத்தை ஒழிக்கவேண்டும் என ஆளும் தரப்பு கூட்டத்தில் கருத்து முன்வைத்தேன்.

எனது கருத்தை சிலர் ஆட்சேபித்தார்கள். அமைச்சராக நியமிக்கப்பட்டாலும் எனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை. எனவே 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் எனது பிரேரணையை அரசாங்கத்திற்கு முன்வைக்க இருக்கிறேன். இதற்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன்.

அத்துடன் 13 ஆவது திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளினால் மக்களுக்கு பிரயோசனம் இருந்ததா, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு செலவழிக்கப்பட்டது,

மாகாண அமைச்சர்களாக கல்வி, விவசாய அமைச்சர்கள் இருந்துள்ளனர். அவர்களால் இந்த துறையின் முன்னேற்றத்துக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது போன்ற விடயங்களை தேடிப் பார்க்கும் பொறுப்பு எனக்கு இருக்கின்றது.

அதுதொடர்பில் தேடிப் பார்த்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன்.

மேலும் மாகாணசபைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி பாரியளவில் வீணடிக்கப்பட்டிருக்கின்றது.

மாகாண சபைகளுக்கு கல்வி அமைச்சர்கள், விவசாய அமைச்சர்கள் போன்றோர் நியமிக்கப்பட்டாலும் அவர்களால் என்ன செய்ய முடிந்தது என எனக்கு தெரியாது.

சகல தேவைகளுக்கும் கொழும்பிற்கு வர வேண்டும். எனவே இந்த மாகாண சபை முறை பயனற்றது என்ற நிலைப்பாட்டிலே நான் தொடர்ந்து இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# பொறுப்பின்றி பொது இடங்களில் குப்பை கொட்டுவோரை கைது செய்யுங்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழில் பொது இடங்கள் மற்றும் வெற்று காணிகளில் குப்பை கொட்டுவோரை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கைது செய்யுங்கள் என வட மாகாண சமுதாய வைத்திய நிபுணர் வைத்தியர் சு.கேசவன் கோரிக்கை விடுத்துள்ளார்**



யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விசேட கூட்டத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணம் முழுவதிலும் கடந்த 3 வருடமாக இந்த கழிவகற்றல் விடயம் தொடர்பில் பேசி வருகின்றோம். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலகத்தினர், உள்ளூராட்சி மன்றத்தினர் இணைந்து தங்களுடைய பிரதேசங்களில் உதாரணமாக யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பகுதியில் பொது இடங்களில் குப்பை கொட்டுவோர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேபோல் நல்லூர்,கோப்பாய் போன்ற பிரதேசங்களில் பொது இடங்களில் குப்பை கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்க தயாராக வேண்டும். அதாவது எங்கிருந்து குப்பைகள் கொட்டப்படுகின்றன. அதனை முதலில் அடையாளப்படுத்துங்கள். அதனை அடையாளம் கண்டு விட்டு உடனடியாக விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் அவர்களை கைது செய்யுங்கள்.

அப்படியானவர்களை இலகுவாக கைது செய்ய முடியும் பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பார்கள்.

பொலித்தீன் மற்றும் இதர கழிவுகளில் மட்டும் தான் இந்த டெங்கு நுளம்பு பரவக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது.

இவ் வருடம் யாழ். மாவட்டம் டெங்கு சிவப்பு எச்சரிக்கையில் உள்வாங்கப்படவில்லை. அந்த நிலையை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொரு கிழமையும் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு பொது இடங்கள் மற்றும் வெற்றுக் காணிகளில் குப்பைகளை கொட்டுபவர்களுக்கெதிராக அதிரடிப்படை மற்றும் பொலிஸார் உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

அதேபோல் இந்த விடயங்களை ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதால் பொது இடங்களில் குப்பை கொட்டுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

டெங்குக் கட்டுப்பாட்டு விடயத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து எதிர்வரும் காலத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார் (5-8-4)

## தேங்காய் விழுந்து இளைஞன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வரணிப் பகுதியில் தேங்காய் பிடுங்கிய இளைஞன் மீது தேங்காய் விழுந்ததில் இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தடியின் உதவியுடன் தேங்காய் பிடுங்கிய போது தேங்காய் நேராக இளைஞனின் மார்பில் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் வரணி - குடமியன் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞனே இவ்வாறு காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.(5-4-30)

## டெங்கு அபாயம்; மக்களே அவதானம்!

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் மாத்திரம் டெங்குத் தொற்றால் 20 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 905 பேர் தொற்றாளர்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் மாத்திரம் 8 பேர் டெங்கு நோயால் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் அவர்களில் மூவர் யாழ்ப்பாணம் சுகா தார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்தவர்களாவர். எனினும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒருவர் மாத்திரமே டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு வி.எம்.எஸ்.கருவிகள் பொருத்த நடவடிக்கை

(கொழும்பு)

பலநாள் மீன்பிடி கலங்க ளுக்கு விரைவில் கண்காணி ப்பு உபகரணங்களை பொரு த்துவதற்கு கடற்றொழில் அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவ டிக்கை எடுத்துள்ளார்.

அதுதொடர்பான கலந்துரை யாடல் ஐ.எம்.ஓ. நிறுவனத் தின் இலங்கை மற்றும் மாலை தீவிற்கான பிரதானி சரத் டாஸ் மற்றும் இலங்கைக்கான அதி காரி சாந்த குலசேகர ஆகியோ ருக்கும் அமைச் சருக்கும் இடை யில் நேற்றுமுன்தினம் மாளி காவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது உடனடி யாக சுமார் 4500 பல நாள் மீன்பிடிக் கலங்களுக்கு கண்காணிப்பு உபகரணங்களை பொருத்துவதற்கு சர்வதேச கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான விவகாரங்களை கையாளுகின்ற அமைப்பான ஐ.எம்.ஓ. (International Mig ration Organization) நிறுவனம் சம்ம தம் தெரிவித்துள்ளது.

வி.எம்.எஸ். கருவிகள் பொருத்தப்படுவது சர்வதேச நியமங்களில் ஒன்றாக காண ப்படுவதுடன், பலநாள் மீன்பிடிக் கலங்களில் ஆழ்கடலுக்குச் செல்லும் மீன்பிடியாளர்கள் நாடுகளுக்கிடையேயான எல் லைகளைத் தாண்டுவது மற்றும் இயற்கை அனர்த்தங்க ளால் திசைமாறிச் செல்வது போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு தேவையற்ற அசௌகரியங்களை தவிர் க்க முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது தெரிவித்தார். (5-4)


கண்ணீர் அஞ்சலி



ஆசிரியர்
கி. கிருஷ்ணகுமார்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
கிட்டிணபிள்ளை சிவபாக்கியம்
அவர்கள் கடந்த 04.09.2020 அன்று காலமான செய்தியறிந்து துயர் அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நண்பர்கள் ( 89/90 பிரிவு )
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்



தவறிவிட்டது

மாங்குளம் - மல்லாவி வழித்தடத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 29-6911 இலக்க றோசா மினி பஸ்சின் உரிமை ஆவணங்கள் அதே வழித்தடத்தில் பயணிக்கும் போது தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து மனிதாபிமானத்தோடு தொலைபேசி இலக்கம் ஊடாக அறியத்தரவும்.

077 732 6098

# டெங்கு வாரத்தை முன்னிட்டு விசேட செயற்றிட்டங்கள்

## அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எதிர் வரும் 28 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரம் டெங்கு ஒழிப்பு வாரமாக அறிவிக்கப்படவுள்ள தாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்து ள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற டெங்கு ஒழி ப்பு விசேட கூட்டத்தில் உரை யாற்றும் போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

டெங்கு நோய் என்பது கட் டுப்படுத்தக்கூடிய அதே நேரம் ஒரு ஆபத்தான விடயம். ஆகவே மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக நாங்கள் முன்கூட் டியே எடுக்க வேண்டிய நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

டெங்கைக் கட்டுப்படுத்துவத ற்கு நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டும். ஆகவே கிராம மட்டங்களில் சுகாதாரக் குழுக்கூட்டங்களை நடத்தி மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண் டும்.

அந்தவகையில் டெங்கு நிலை மையினைக் கருத்திற் கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புண ர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரம் டெங்கு விழிப்புணர்வு வாரமாக அறிவிக்கவுள்ளோம்.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய இடங்களை அவதா னித்து கழிவுகளை அகற்றும் வேலைத்திட்டங்களை இவ் வாரத்தில் முன்னெடுக்கவுள் ளதாகவும் அவர் தெரிவித் தார். (ஜ-4-8)

# வெளிநாடுகளுக்கான 6 புதிய தூதர்கள்; கருத்துக்கோரும் பாராளுமன்றம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள பல்வேறு இலங்கை தூதரகங்க ளுக்கு புதிய தூதுவர்களாக 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமிக்கப்பட்ட புதிய தூதர் கள் குறித்து பொதுமக்கள் கரு த்தை பாராளுமன்றம் கோரியு ள்ளது.

அட்மிரல் (ஓய்வு) கே.கே.வி.பி. ஹரிச்சந்திர டி சில்வா - ஆப் கானிஸ்தான்

விஸ்ரமல் சஞ்சீவ் குண சேகர - ஜப்பான்

அசோக மிலிந்த மொரகொட - இந்தியா

ரவீநாத் ஆரியசிங்க - அமெ ரிக்கா

பேராசிரியர். க்ஷானிகா ஹிரிம்புரேகம - பிரான்ஸ்

டாக்டர் பாலித கோஹன்ன - சீனா

புதிய தூதுவர்கள் தொடர் பில் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பும் நிறுவனங்கள் அல் லது தனிநபர்கள் கையொப்பமி டப்பட்ட எழுத்துபூர்வ குறிப்பு களை பதிவுத் தபால் மூலமாக **The Secretary, Committee on High Posts, Committee Office, Parliament of Sri Lanka, Sri Jayewardenepura, Kotte** என்ற விலாசத்துக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனு ப்புமாறு கோரப்பட்டுள்ளது.

குறிப்புக்களின் பிரதிநிதி களைத் தொலைநகல் இலக் கம் 011-277 7300 இற்கு அனுப்பி வைக்க முடியும் அல்லது **highposts_c@parParliament.lk.** என்ற மின்ன ஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக் கலாம் எனவும் அறிவிக்கப்பட்டு ள்ளது. (ஜ-4)

# கஞ்சா பிடிக்கச்சென்ற பொலிஸாரை சுற்றிவளைத்துத் தாக்கிய கும்பல்

(கொழும்பு)

வீட்டின் பின்புற தோட்டத்தில் கஞ்சா பயிரிடப்பட்ட தோட்ட த்தை சுற்றிவளைத்துத் தேடு தல் நடத்தியபோது வீட்டிலுள்ள வர்களால் நிகழ்த்தப்பட்ட கடு மையான தாக்குதலில் இரு உபபொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் இரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என நான்கு பொலிஸார் காயமடைந்து பண் டாரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை பண்டார கம - அட்டுலுகம பகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த தக வலின் அடிப்படையில் பண்டார கம பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பு நடவடிக்கையில் ஈடு பட்ட பொலிஸ் குழுவினர் மீதே குடியிருப்பாளர்களால் பொலி ஸார் கடுமையாகத் தாக்கப்ப ட்டனர்.

பின்னர் மேலதிக பொலி ஸார் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ப்பட்டது. இத்தாக்குதல் சம்ப வம் தொடர்பில் மூன்று பெண் கள் உட்பட நான்கு சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள் ளனர். (2-10)

# மக்கள் ஆணையை புறந்தள்ள முடியாது

## கெஹலிய உறுதி

(கொழும்பு)

அரசியல் யாப்பில் 19 ஆவது திருத்தத்தை விரிவாக நீக்குவ தற்காக மக்கள் வழங்கியுள்ள ஆணையை புறம்தள்ள அர சாங்கம் தயாரில்லை என வெகு ஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரி வித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடை பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

சட்டமா அதிபர் திணைக் களம் மற்றும் சட்டத்துறை சார்ந்தோர் இதற்கு சாதகமான கருத்துக்களை முன்வைத்துள் ளனர். இதற்கமைவாகவே இத ற்கான திருத்த வரைவு மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆவது அரசியல் அமை ப்பு நீக்கப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்கம் தெரிவித்திருந்த நிலையில் இதற்காக மக்கள் வரலாற்றில் முதல் தடவையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதி காரத்தை சமகால அரசாங்கத் திற்கு வழங்கியுள்ளார்கள்.

இதனைத் துரிதமாக நிறை வேற்ற முடியாவிட்டால் அது மக்களுக்கு எதிரான துரோகச் செயலாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் நிவாரணம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரை வாக நிவாரணம் வழங்க நட வடிக்கை எடுத்துள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. சேதமடை ந்த வீடுகளை திருத்தியமைக்க 14 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி மாவட்ட செயலா ளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தாக அனர்த்த நிவாரண சேவை கள் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் 150 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வு கூறியுள்ளது. இதனையடுத்து, பலத்த மழை வீழ்ச்சிக்கான சிவப்பு அறிவித் தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# அரச நிறுவனங்களுக்கான புதிய கட்டட நிர்மாணங்கள் பிற்போடல்

(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்கான புதிய கட்டடங்களை நிர்மாணிக் கும் பணிகளை இரண்டு வரு டங்களுக்கு பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செலவுக ளைக் குறைக்கும் நோக்கி லேயே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிக்கல தெரிவித்தார்.

அத்துடன் இவ்விடயம் தொட ர்பில் அனைத்து அமைச்சுக்க ளின் செயலாளர்களுக்கும் அனைத்து இராஜாங்க அமைச் சுக்களின் செயலாளர்களிற் கும் திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் சபைக ளின் தலைவர்களிற்கும் அறி விக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-6)

# 296 பேர் நாட்டிற்கு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மத்திய கிழக்கு நாடுக ளில் சிக்கித் தவித்த 296 இலங்கையர்கள் நேற் றுக் காலை நாடு திரும் பினர்.

அதன்படி சவுதி அரே பியாவிலிருந்து 258 பேரும் நேற்று அதிகாலை 2.11 மணியளவில், அதே போல் ஐக்கிய அரபு இரா ச்சியத்தில் இருந்து 10 பேரும் நேற்று அதி காலை 1.23 மணியள வில், மேலும் 28 பேர் டோஹாவிலிருந்து அதி காலை 1.33 மணியள வில் நாட்டை வந்தடை ந்தனர்.

விமான நிலையத் துக்கு வருகைதந்த அனை வருக்கும் பி.சி.ஆர். பரி சோதனை மேற்கொள்ள ப்பட்டதுடன், அவர்கள் தனிமைப்படுத்தல் நிலை யங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

# குடும்பஸ்தர் பலி



(கேகாலை)

கேகாலை, அம்பன்பி டிய, நேம்பரியாவ வீதி யில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடு ம்பஸ்தர் ஒருவர் உயிரிழ ந்தார்.

51 வயதுடைய வச ந்த ஜயசிங்க என்ற 2 பிள்ளைகளின் தந்தை ஒருவரே குறித்த விபத் தில் உயிரிழந்தார். (ஜ-4)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். த.மதனரூபி (ரெனி)

மண்ணில் 1985 . 11 . 16

விண்ணில் 2017 . 09 . 13

எம் அன்புத் தெய்வமே ரெனி!
ஏனம்மா எங்களை விட்டுச் சென்றாய்?
அன்பின் உருவாய்!
அழகில் தேவதையாய்!
எம் வீட்டின் செல்லமாய்!
இருந்த உனை இறைவன்
பறித்துச் சென்றதுதான்
பொறுக்க முடியவில்லையம்மா!

திருநெல்வேலி, கலாசாலை வீதி, பாரதிபுரம்.

(3838)

தந்தை.

# நிதி உதவி வழங்கியவர்களுக்கு ஆளுநர் சார்ள்ஸ் பாராட்டு




(யாழ்ப்பாணம்)

வடமாகாண வைத்தியசாலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புற்றளைப் பிள்ளையார் கோவிலடி அமரர் விஜயரட்ணக் குருக்கள், அமரர் சந்திரகுமாரி ஞாபகார்த்தமாகப் புனரமைக்கப்பட்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள சிறுவர் விடுதி கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


எமது நாட்டில் கல்வியும் மருத்துவமும் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படுகிறன. இவை இலங்கையிலுள்ள அனைத்து மக்களாலும் பெறக்கூடியதாக இருக்கின்றன.

இதற்காக அரசாங்கம் பல மில்லியன்களை செலவழித்து வருகின்றது. அதிலும் அதிக பணம் மருத்துவத் துறைக்கே செலவழிக்கப்படுகின்றது.

இருப்பினும் மக்களின் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. அதற்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. அதனூடாக மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவையை முழுமையாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ் வைத்தியசாலையின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ் வைத்திய சாலை மட்டுமல்லாது வட மாகாணத்திலுள்ள இன்னும் சில வைத்தியசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்துதரும்படி ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ளேன்.

அதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன். இந்த வைத்தியசாலையின் பல பிரிவுகளை வெளிநாடுகளிலே வசிக்கும் இம் மண்ணின் மைந்தர்கள் நிதி உதவி வழங்கி புனரமைத்துள்ளனர். அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (5-8)



சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சுவிட்சர்லாந்து கிளை உறுப்பினர் சி.செல்வபாலனின் அனுசரணையில் நேற்றுப் புதன்கிழமை பாடவிதான வினாக்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்பட்டன. அதிபர் திருமதி மூகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டார். (படங்கள்:- சுபேசன்)

## உர விநியோக டோக்கன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி கிழக்கு கமக்காரர் அமைப்புக்குட்பட்ட பிரிவில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச உர விநியோகத்திற்கான "டோக்கன்" வழங்கல் நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நாவற்குழி கிழக்கு அறிவொளி மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

விவசாயிகள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் வருமாறு நாவற்குழி கமக்காரர் அமைப்பு அறிவித்துள்ளது. (5)

## முன்னாள் முதல்வர் பொன்.சிவபாலனின் 32 ஆவது நினைவு தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான பொன்.சிவபாலனின் 32 ஆவது வருட நினைவு தினம். நாளை 11 ஆம் திகதி மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெறும். (5-4)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய சுகாதார நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில்கொரோனாத்தொற்று நோய் அபாயநிலை நிலவும் சூழலில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பாகவுள்ள ஸ்ரீ வல்லிபுராழ்வார் மஹோற்சவ காலத்தில் பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்,

01.ஸ்ரீவல்லிபுராழ்வார் ஆலய மஹோற்சவ காலத்தில் சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 350 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

02.அடியவர்கள் ஆலயத்துக்கு வருகைதரும்போது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணம் இவற்றில் ஏதாவது ஒன்றை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக உடன் எடுத்து வரவேண்டும். அவற்றில் ஏதாவது ஒன்று வீதித் தடையில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்பட்டே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

03.வீதித் தடைகளூடாக ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக்கவசம் அணிந்திருத்தல்

04.ஆலயத்துக்குள் உள் நுழைவதற்கு முன்னர் கைகளைச் சுத்தம் செய்தல்

05.ஆலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தனியாள் சமூக இடைவெளியை பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுதல் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

06.அடியவர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தருவது சிறந்தது.

07.அடியவர்கள் ஆலயத்தில் நீண்ட நேரம் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

08.கொரோனாத் தொற்றுப் பாதிப்புக் காரணமாக சுய தனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு காலம் முடிவுற்ற பின்னர் அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் முடிவுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களைத் தம்முடன் கொண்டுவருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தல் மருத்துவ சான்றிதழ்களை எப்போதும் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

09.வயோதிபர்கள், நோயாளர்கள், சிறு குழந்தைகள் தங்களது தனியாள் சுகாதார நலன் கருதி ஆலயத்திற்கு வருகை தருவதை இயன்றவரை தவிர்த்தல் நன்று.

10.கொவிட்-19 அறிகுறிகள் (காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் போன்றவை) காணப்படுபவர்கள் ஆலயத்திற்கு வருகை தருவதைத் தவிர்க்கவும்.



11.ஆலச் சுற்றாடலில் வீதிகளில் மண்டபப்படி வைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

12.தற்போது நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையில் அங்கபிரதட்சணம் செய்தல், அடி அடித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின் போது கொரோனாக் கட்டுப்பாட்டு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இவ்வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

13.ஆலயச் சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொது மக்கள் கூடுவதற்கான தெய்வீகச் சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் பொழுது போக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

14.ஏற்கனவே ஆலயச் சூழலில் நிரந்தரமாக இயங்கிவந்த வியாபார நிலையங்கள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் இயங்கி வரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

15.ஆலயச் சூழலிலுள்ள வெற்றுக் காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் நடமாடும் வியாபாரமும் தடைசெய்யப்பட்டுள்ளது.

16.ஆலய பெருந் திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17.தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அத்துடன் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியினால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை ஸ்ரீ வல்லிபுராழ்வார் ஆலய மஹோற்சவ காலங்களில் ஆலயச் சுற்றாடல்களில் அடியார்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (5)

# மோசடியில் ஈடுபடுவோரின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும்-வாசு

(கொழும்பு)

**மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தினார்.**



நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பாக கடந்த காலங்களில் விசாரணைகள் இடம்பெற்றன. எனினும், இதன் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க முடியாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்க வேண்டும் என நான் இவ்வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். மேலும், இவ்வாறான குற்றங்களை தடுக்க விசேட சட்ட திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

அதேநேரம், இதன் பிரதான குற்றவாளி வெளிநாட்டில் உள்ளார். எனவே, இவரை எவ்வாறு நாட்டிற்கு கொண்டுவருவது என்பது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இவ்வேளையில் கேட்டுக் கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

## அடையாள அட்டைவிபரங்களை அறிவதற்கு வலையமைப்பு

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தால் அடையாள அட்டைவிபரங்களை வலையமைப்பினூடாக ஆராய்ந்து உறுதிப்படுத்துவதற்கான திட்டமொன்று அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் வியானி குணதிலக தெரிவித்துள்ளார். (ஜ-10)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 84 - செவ் 1 இல் உயரம்: 5'9"
தகைமை/தொழில்: PhD, Nutritionist/ Researcher
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள். அவுஸ்திரேலியா சென்று வசிப்பவர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
தொ.இ: B/11177

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. பொலிஸ் உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11179

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: செவ் 6 ல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர். (அரச)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11180

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: செவ் 9 ல் உயரம்:5'7"
தகைமை/தொழில்: LLB, Attorney at Law, சட்டத்தரணியும் நொத்தாரிசும்.
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகள்
தொ.இ: B/11181

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: செவ் 9 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: Biomedical Physics (Canada)
எதிர்பார்ப்பு: வைத்தியர், கணக்காளர், பொறியியலாளர் போன்றோர்.
தொ.இ: B/9080

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 65 செவ் 7 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Sc,
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்ள பட்டதாரி மணமகன்
தொ.இ: G/9083

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: செவ் 6 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bachelor of Optometry. Optometrist (Australia)
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர்
தொ.இ: B/9090

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 87 செவ் 8 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: விவசாயப் பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்.
தொ.இ: B/9092

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## வாக்காளர்களாகப் பதியுங்கள் இது ஜனநாயகக் கடமை, உரிமை

### மாவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொருவரும் தவறாது தங்களை வாக்காளர்களாகப் பதிந்து கொள்ள வேண்டும் என்றும் பதிந்துள்ளவர்கள் தங்களின் பெயர்கள் தொடர்ந்தும் பதிவிலுள்ளனவா என்பதைச் சரி செய்து மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா அறிவுறுத்தியுள்ளார்.



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் போர் காரணமாக இடப்பெயர்வுகள் காரணமாகப் பதிவு இடம்பெறாமலும் அல்லது பதிந்துள்ளவர்கள் மீளவும் இடப்பெயர்வின் போது, வதிவிடங்களை மாற்றியிருக்கும் நிர்ப்பந்தத்தினால் பதிவுகளை இழந்து இருக்கும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

இன்னும் பிறநாடுகளுக்கும் குறிப்பாக இந்தியா, தமிழ் நாட்டுப் பிரதேசங்களிலும் முகாம்களிலும் அகதிகளாக உள்ளவர்கள் நாட்டில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு உரித்துடையவர் ஆவார். அவர்களின் வாக்குரிமையைத் தொடர்ந்தும் பேண வேண்டும். அவ்வாறான உயிருடன் வாழ்பவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் பேண நடவடிக்கை தொடர வேண்டும். அதற்கு உரித்துண்டு. அவ்வாறான பெயர்களை நீக்க இடமளிக்கக் கூடாது.

தற்போது கிராம உத்தியோகத்தர்கள் வாக்காளர் பட்டியல்களை வீடு வீடாக விநியோகிக்கும் போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கிராம உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து செயலாற்றலாம். அவ்வாறான பிரதிநிதிகள் விநியோகிக்கப்படும் வாக்காளர் பெயர்ப்பட்டியல்களை பரிசீலித்து தவறுகளிருப்பின் திருத்திக் கொள்ளவும் பதிவு இல்லையாயின் அல்லது புதிதாகப் பதிய வேண்டியிருப்பின் அப் பெயர்களைப் பதியவும் வேண்டும்.

பதிவதில் அல்லது திருத்தங்களின் போது தடைகளேற்படின் அவை தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொண்டு சரி செய்ய உதவ வேண்டும். குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் போரினால் பாதிக்கப்பட்டதும் மீள் குடியேற்றப்பகுதிகளாகவுள்ள பிரதேசங்களில் மக்கள் பிரதிநிதிகளாகவுள்ளோர் உடன் செயலாற்ற வேண்டுமென வலியுறுத்துகின்றோம். இது எங்கள் ஜனநாயகக்கடமை, ஜனநாயக உரிமையாகும் என அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

## மருத்துவ பீடங்களுக்கு மேலும் 350 மாணவர்கள்

(கொழும்பு)

இவ் வருடம் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் 350 பேரால் அதிகரிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேசிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் மருத்துவபீட மாணவர் சேர்க்கையை 350 மாணவர்களால் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இந்த மேலதிக அனுமதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-10)

# “இந்திய அரசே! எமது கடல் வளத்தை அழிக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்து”

## இந்திய மீனவர்களின் செயற்பாட்டைக் கண்டித்து மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்



(மன்னார்)

**இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகளை கண்டித்து மன்னார் பேசாலை கிராம மக்கள் நேற்று புதன்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

பேசாலை கிராம மக்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று காலை 8.45 மணியளவில் பேசாலை பஸார் பகுதியில் இடம் பெற்றது.

பேசாலை கிராமத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாமல் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமது கடல் எமது மக்கள் தொழில் புரிவதற்கே இந்திய மக்களுக்கல்ல,இந்திய அரசே எமது கடல் வளத்தை அழிக்கும் செயற்பாட்டை உடன் தடுத்து நிறுத்து, இலங்கை அரசே எமது மீனவர்களை பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்று உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் கடந்த 30 வருட கால யுத்தத்தின் போது அனுபவிக்காத பல்வேறு பிரச்சினைகளுக்கு தாம் தற்போது முகம்கொடுத்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்ட பேசாலை கிராம மக்கள் தெரிவித்தனர்.

வட பிராந்திய கடல் பகுதிகளில் திறந்து விடப்படுகின்ற அனைத்து பகுதிகளையும் இலங்கை கடற்படை மற்றும் இராணுவத்தினரால் மூடப்பட வேண்டும்.

குறித்த பகுதிகளினூடாக அனுமதிக்கப்படுகின்ற இந்திய இழுவைப்படகுகளின் வருகை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் போதைப்பொருட்கள் மற்றும் பணம் பரிமாற்றப்படும் சந்தர்ப்பங்களில் கொரோனாத் தொற்றிற்கு உள்ளாகக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாட்டினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் தொழில் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளுக்கும்,பொருளாதார ரீதியாகவும் பாதிப்படைந்து வருகின்றனர்.

எனவே ஜனாதிபதி,பிரதமர் ஆகியோர் குறித்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

போதைப்பொருட்களின் ஊடாக எமது நாட்டிற்கு கொண்டுவரப்படுகின்ற கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, இலங்கை கடற்படை இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைத்து குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் போது அருட்தந்தையர்கள்,பேசாலை கிராம மக்கள், மீனவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர். (5-4-285)

## வெளிநாட்டிலிருந்து வந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(நெளுக்குளம்)

குவைத் நாட்டில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பெரியகாடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டவர்களில் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்ட பலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் கொரோனாத் தடுப்பு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நாடு திரும்பிய 100 பேர் வவுனியா பெரியகாடு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் அங்கு தங்க வைக்கப்பட்டிருப்பவர்களிற்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தன. பரிசோதனை முடிவுகளின்படி இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இருவரும் வெலிகந்தை கொரோனாத் தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (5-4-299)

## 20 ஆவது திருத்தச்சட்டத்தை கூட்டமைப்பு எதிர்க்கும்

### சித்தார்த்தன் நம்பிக்கை

(சாவகச்சேரி)

அரசியலமைப்பின் 20வது திருத்தத்தை ஒரு தனிப்பட்ட நபரை இந்த நாட்டின் சர்வாதிகாரி ஆக்குவதற்கான முயற்சியாகவே நாங்கள் பார்க்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை சாவகச்சேரிக்கு வருகை தந்த அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தில் இருக்கக்கூடிய ஜனநாயக அம்சங்கள் பலவற்றை இல்லாமல் ஆக்குவதற்கான முயற்சியாகவே 20 ஆவது திருத்தம் அமைந்துள்ளது.

ஆகவே இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக எதிர்க்கும்.

பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் அதனை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நெளுக்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன் அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (5-4-299)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தால் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மணல் ஏலவிற்பனை நீதிமன்ற வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலயத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் என கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)



வவுனியா மாவட்ட சமுர்த்தி பயனாளிகளை ஊக்கப்படுத்தல் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் செயலாளர் சமன் பந்துலசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள கணக்காளர், சிரேஷ்ட முகாமையாளர்கள், மற்றும் தலைமைப்பீட முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்- குருமன்காடு செய்தியாளர்)

# இராசிபலன்

10.09.2020
ஆவணி 25, வியாழக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.55 மணிவரை
ரோகிணி முற்பகல் 11.24 மணிவரை
சுபநேரம் 7.33 - 9.03 மணிவரை
இராகுகாலம் 1.33 - 3.03 மணிவரை
சந்திராஷ்டமம்- விசாகம், அனுசம்
வளவன்


மேஷம்

எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.


மிதுனம்

தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.


கடகம்

குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், முரண்பாடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு.


துலாம்

பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவர்.


மகரம்

மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.


கும்பம்

உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


மீனம்

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கே கீழ்ப்படிதல் இருக்கும்.

# கொரோனாவால் உயிரிழப்பவர்களின் உடல்களை தகனம் செய்வது குறித்து விசேட தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், உயிரிழக்கும் நபர்களின் உடல்களை தகனம் செய்வது குறித்து வெளியான வர்த்தமானியை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி குறித்த மனு மீதான விசாரணையை மேற்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்றைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நீதியரசர் சிசிர டி அப்ரூ தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழாமினால் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட தரப்பினரால் குறித்த மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்பவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

பெருந்தோட்டங்கள் பகிர்ந்தளிப்பு விவகாரம்

# தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்

## மனோ வலியுறுத்து



(கொழும்பு)

நட்டமடையும் பெருந் தோட்டங்களை பகிர்ந்தளிக்கும் விடயத்தில், தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் வலியுறுத்தினார்.

பெருந்தோட்டங்கள் நட்டமடைவது காலம்காலமாக நடைபெறுகின்றது.

அதனை எதிர்கொள்ளவே, நட்டமடையும் பெருந்தோட்டங்களை சிறு தோட்ட உடைமைகளாக பிரித்து வழங்க வேண்டும் என தாம் கூறியதாக பேஸ்புக் பதிவு ஒன்றில் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில், நட்டமடையும் தோட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அக்கறை காட்டுவது நல்லது என்றும் அவற்றை சிறு தோட்டங்களாக பயிர்ச்செய்கைக்காகவும், இரத்தினக்கல் அகழ்வுக்காகவும், காணிகள் பிரித்து வழங்கப்பட ஜனாதிபதி முடிவு செய்துள்ளமை நல்லதாகும்.

ஆனால் காணிகள் பிரித்து, வழங்கப்படும் போது, தோட்டத்தொழில் துறையில் பெரும் தொழில் நேர்த்தி அனுபவம் கொண்ட தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

இதனைக் கவனத்தில் கொள்வது, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களின் கடப்பாடு என தான் நினைவு படுத்துவதாகவும் அவர் கூறினார். (ஜ-6)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்காகவே அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தப்பட்டேன்

## ரணில்,மைத்திரி குறித்து பிள்ளையான்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேவைக்காக தான் அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தப்பட்டதாக பிள்ளையான் தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் ஆஜராகி வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், தான் தீவிரவாதியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் முன்பிருந்த மகிந்த அரசாங்கம் தன்னை சிறையில் அடைத்திருக்கும்.

இது ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரியின் வேலை. இது அவர்களின் அரசியல் பழிவாங்கல்களின் நடவடிக்கையாகும். இவர்கள் இருவருக்கும் தேர்தல் ஆதரவு தேவை.

அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மகிழ்ச்சிப்படுத்தவே தன்னை சிறையிலிட்டார்கள் எனத் தெரிவித்தார். (ஜ-6)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

14

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



துணைவிதிகள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அத் துணைவிதிகளைத் திருத்துவதற்கும் இல்லாதொழிப்பதற்குமான அதிகாரங்கள் உள்ளூராட்சிநிறுவனங்களுக்கு உண்டு. மாநகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவுகள் 267-275, நகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவுகள் 153-157, பிரதேச சபைச் சட்டம் பிரிவுகள் 122-128 இதற்கு ஏற்புடையன.

அரசியல் யாப்பில் 76(1) உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்குரிய சட்டமாக்கும் அதிகாரம் வேறு யாருக்கும் வழங்கப்படலாகாது என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 76(2) மற்றும் 76(3) ஆகிய உறுப்புரைகளுக்கு இணங்க ஒரு குறிப்பிட்ட விடயத்திற்காக உபவிதிகளினை உருவாக்குவதற்காக ஒரு நபருக்கோ, அதிகார சபைக்கோ அதிகாரத்தினை ஒப்படைக்கும் சட்டங்கள் பாராளுமன்றத்தினால் இயற்றப்படலாம். ஆகவே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களுக்கு இணங்க, குறிப்பிட்ட விடயங்களிற்காக உபவிதிகளை உருவாக்க ஒரு நபருக்கோ அல்லது அதிகார சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

**அரசியல் யாப்பில் 76(1) உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்குரிய சட்டமாக்கும் அதிகாரம் வேறு யாருக்கும் வழங்கப்படலாகாது என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 76(2) மற்றும் 76(3) ஆகிய உறுப்புரைகளுக்கு இணங்க ஒரு குறிப்பிட்ட விடயத்திற்காக உபவிதிகளினை உருவாக்க உள்ளூராட்சி நிறுவனங்களினால் முடியும். உபவிதி பொருந்துகின்ற துறைகளை இனங்கண்டு உபவிதிகளை உருவாக்க வேண்டும். உத்தரவுகள் மற்றும் ஒழுங்கு முறைகள் (Rules and Regulations) உபவிதிகளாக கருதப்படும்.**

சில விடயங்களுக்கு ஏற்ப உபவிதிகள் அமுல்படுத்த வேண்டி இருக்கின்றமை மற்றும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய தேவை ஆகியன உபவிதிகளின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைகின்றன. அனைத்து உபவிதிகளும் ஆங்கில மொழிப் பெயர்ப்புடன் இரண்டு தேசிய மொழிகளிலும் உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பு:- அரசியல் யாப்பு 23 (01)- அரசியல் யாப்பின்படி அனைத்து சட்டங்கள் மற்றும் உபவிதிகள் அமுல்படுத்தல் அல்லது வெளியிடுதல். ஆங்கில மொழியின் மொழிபெயர்ப்புடன் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இருத்தல் அவசியமாகும்.

விளக்கமளிக்கும் கட்டளை சட்டத்திற்கு இணங்க அர்த்தம் மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றினை உபவிதி உருவாக்கத்தில் கருத்திற் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

ஏற்பாடுகளை உருவாக்குகின்ற அதிகாரிகளுக்கு அந்தச் சட்டம் அமுல்படுத்துவதற்கு இருக்கின்ற செயன்முறையினை பின்பற்றி எந்நேரத்திலும் அவற்றை திருத்துவதற்கும், மாற்றுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும், மீளபெறவும் முடியும். இதில் ஏற்பாடு என கூறும் போது ஏற்பாடுகள் மற்றும் உத்தரவுகள், கட்டளைகள், உபவிதிகள் ஆகியன உள்ளடங்கும். ஏற்பாடுகளாவன வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். நீதிமன்றத்தினால் வர்த்தமானி ஒரு சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் பொருத்தமான சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களின் அர்த்தத்திலேயே பார்க்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு ஏற்பாடு, உத்தரவு, உபவிதிகளுக்கு இணங்க செய்யப்பட்ட செயல் அல்லது அந்த ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு குறிப்பிட்ட சட்டம், பிரகடனத்திற்கு கீழ் இருக்கின்ற அதிகாரத்திற்கு ஏற்ப செய்யப்பட்டிருப்பதாக கருதப்படும். பிரதான சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பெல்லைகளை மீறி உபவிதிகளை அமுல்படுத்த முடியாது. அந்தச் சட்டம் இயற்கைக்கு இணங்க இருத்தல் அவசியமாகும். அவ்வாறு அமையாத சந்தர்ப்பங்களில் அந்த சட்டம் உயர் நீதிமன்றங்களுக்கு விசாரனைக்கு உட்பட்டு ரத்து செய்யப்படும்.

மாநகர சபை, கட்டளை சட்டத்தில் 272 ஆம் பிரிவின் கீழ் 32 பிரதான விடயப்பரப்பில் 126 விடயங்கள் தொடர்பாகவும், நகர சபை கட்டளை சட்டத்தின் 157ஆம் பிரிவின கீழ் 15 பிரதான விடயப்பரப்பில் 108 விடயங்கள் தொடர்பாகவும், பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயப்பரப்பில 137 விடயங்கள் தொடர்பாகவும், மற்றும் 69 ஆம் பிரிவின கீழ் பாதைகள் தொடர்பாகவும் உபவிதியினை உருவாக்க சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது உறுப்புரையின் கீழ் சட்டத்துடன் பொருந்தக்கூடிய அனைத்து விடயங்களிலும் உபவிதியினை உருவாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**உபவிதிகள் உருவாக்கப்படக்கூடிய துறைகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

**1. அலுவலக விடயம்தொடர்பாக**

- மாநகர கட்டளைச் சட்டத்தின் கீழ் நகர பிதா, பிரதி நகர பிதா, நகர ஆணையாளர், அறக்கொடை ஆணையாளர், நகர நீதவான் ஆகிய பதவிகளை உருவாக்குதல்.
- உள்ளூராட்சி சேவைகளைச் சாராத சபையின் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் சம்பளம், படிகள் போன்றவற்றைச் செலுத்துதல். அவர்களுக்கு லீவு வழங்குதல். அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் கருமங்களை ஒப்படைத்தல்.
- மதிப்பீடுகள், வரவு-செலவுத் திட்டம், கூற்றுக்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் மாதிரிகளைத் தயாரித்தல். கணக்குப் பதிவு மாதிரிகள்.
- உரிய பதிவேடுகள், பெயரிடாப்பு அல்லது பிற பதிவேடுகளின் மாதிரிகள்.

**2. கட்டடங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக**

- புதிய பாதைகளின் மட்டம், அகலம் மற்றும் நீளம்.
- கட்டட மதில்கள், அத்திாரம், புகைபோக்கி அமைப்பு போன்ற விடயங்கள்.
- அடுப்புகள், படிக்கட்டுகளின் அமைப்பு, மனித வாழ்க்கைக்குப் பொருத்தமான இடங்களின் உயரம்,
- காற்றோட்டம், வீடுகளின் தள அமைப்பு.
- வளிச் சுற்றோட்டம்.
- கட்டடங்களைச் சார்ந்த திறந்த வெளிகளில் கல் பொருத்துதல்.
- பயன்படுத்த வேண்டிய பொருட்களின் தரம்.
- கட்டடங்களின் முன்பக்க எல்லை.
- வரிசைக் கட்டடங்களின் பாதைக்கான ஒதுக்கம்.
- புதிய கட்டடங்கள் அல்லது அவற்றை மாற்றுதல் மீதான கட்டண அறவீடு.
- வடிகால்கள், சாக்கடைகள், மலசல கூடங்கள், நீராடும் இடங்களைத் திட்டமிடுதல்.
- அவற்றைப் பரிசீலனை செய்தலும் கட்டணங்களை விதித்தலும்.
- வடிகாலமைப்புப் பணிகளுக்கான கட்டணங்களை விதித்தல்.
- புதிய பாதைகள் மற்றும் தெருக்களுக்கான குப்பைகூழ, வடிகால் மற்றும் சாக்கடை முறைமைகளை வழங்குதல்.
- பொது மலசலகூடப் பாவனையை ஒழுங்கு முறைப்படுத்துதல்.

**3.நீர் தொடர்பான பணிகளுக்காக**

- நீர் விரயமாக்கப்படுவதைத் தடுத்தல்.
- நீரை எடுத்துச் செல்லல், பாவனைக்கு எடுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், சேகரித்தல் தொடர்பான விதிகளை ஆக்குதல்.
- பொது நீர் விநியோகம்.
- தனியார் சேவைகள் மூலமாக நீரை வழங்குதல்.
- அளவை முறையடிப்படையில் நீரை வழங்குதல்.
- மனைசார் நடவடிக்கைகள் அல்லாதவற்றுக்காக நீரை வழங்குதல்.
- நீருக்காகப் பணம் அறவிடும் செயல்முறையை விதித்தல்.
- நீர்க் கைத்தொழில் கட்டுப்பாடு.

**4.துப்புரவேற்பாட்டு பணிகளுக்காக**

- இடையூறுகளைத் தடுத்தல்.
- மலம், சிறுநீர் ஆகியவற்றை அப்புறப்படுத்தல்.
- சாக்கடைகள், மலசலகூடங்களைப் பரிசீலனை செய்தல் - மனித வசிப்பிடத்திற்குப் பொருத்தமற்ற கட்டடங்களை மூடிவிடுதல்
- தனியார் இடங்களில் குப்பை கூழங்களை அப்புறப்படுத்தல்.
- தொற்று நோய்க் கட்டுப்பாடு.
- தற்காலிக கட்டடங்களையும், நோய்த் தொற்றுடைய பொருட்களையும் சுத்தம் செய்தல்.
- பன்றி வளர்ப்பினைக் கட்டுப்படுத்தல்.
- மலேரியா போன்ற நோய்களைத் தடுத்தல்.
- குதிரை லாயங்கள், மாட்டுத் தொழுவங்கள் போன்றவற்றுக்கான உரிமங்களை வழங்குதல்.
- சபையின் பொறுப்பில் இல்லாத நீராடும் அல்லது விலங்குகளை நீராட்டும் இடங்களின் மேற்பார்வை.

**5.பாதைகள் தொடர்பான பணிகள் சம்பந்தமாக**

- பாதைகளை விருத்தி செய்தல்.
- மோட்டார் வாகனப் போக்குவரத்தினை ஒழுங்கு முறைப்படுத்தல்.
- பாதைகளிலுள்ள அறிவித்தல் பலகைகள் போன்றவற்றுக்கான கட்டணங்களை விதித்தல்.
- பாதைகள் அமைத்தல், பராமரிப்பு, பாவனை கட்டுப்பாடு மற்றும் தடைகளினை அகற்றுதல்

**6.காணியும் ஆதனங்களும் தொடர்பாக**

- கட்டடங்கள், காணி ஆகியவற்றை வகைப்படுத்தலும் விலைமதிப்பு செய்தலும்.
- காணி மற்றும் கட்டட உரிமையாளர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்தல்.
- ஈட்டு உரிமையாளர்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.
- வரி அறவிடத் தடை செய்யப்பட்ட ஆதனங்கள் பற்றிய அறிவித்தல்கள்.
- தனியார் மற்றும் பொதுக் காணிகளின் அளவீட்டுப் பணிகள்.
- பொதுவான புல்வெளிகளைக் கண்காணித்தல்.

**7.வர்த்தக நிலையங்கள், சந்தைகள், பேக்கரிகள் மற்றும் உணவுப் பொருட்கள் சம்பந்தமாக**

- பேக்கரிகளுக்கும் அதன் ஊழியர்களுக்கும் உரிமங்களை வழங்குதல்.
- வளர்ப்பு விலங்குகளை விற்பனை செய்தலும் சந்தைகளை நிருவகித்தலும்.
- நகரத்திற்கு கொண்டுவரப்பட்ட பழுதடைந்த மீன், இறைச்சி ஆகியவற்றைத் தடைசெய்தல்.
- வர்த்தக நிலையங்களை நடத்துவதற்கான உரிமங்களை வழங்குதல்.
- துணைவிதிகளுக்கு முரணான வியாபாரத்தைத் தடுத்தல்.
- விலைப் பட்டியலைக் காட்சிக்கு வைத்தல்.
- நிறுத்தல் மற்றும் அளவை என்ற வகையில் பொருட்கள் விற்கப்படுவதை ஒழுங்கு முறைப்படுத்தல்.

(தொடரும்....)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022



தனுசு இராசி வாசகர்களே!

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த கேது, செப்டெம்பர் முதலாம் திகதியன்று விரய ஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்திற்குச் செல்கின்றார். அதேநாளில் இதுவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு ஆறாமிடத்திற்கு வரப்போகின்றார்.

இதற்கிடையில் நவம்பர் 15ஆம் திகதி குரு, மகர இராசிக்கு செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் கூட, சனிப்பெயர்ச்சிக்குப் பின்னால் அவர் நீச்ச பங்க ராஜயோகத்தை உருவாக்குகின்றார். அதுமட்டுமல்ல அவரது பார்வையும் 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது.

# ஆறில் ராகு வருகிறது... அனைத்திலும் யோகம் தருகிறது!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

அதன் பிறகு டிசெம்பர் 26 ஆம் திகதி மகர இராசிக்கு சனி செல்கின்றார். இப்பொழுது ஏழரைச்சனியில் குடும்பச்சனியின் ஆதிக்கம் தொடங்குகின்றது. 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கும்ப இராசிக்கு குரு செல்கின்றார். இந்தக் கிரகப் பெயர்ச்சிகளை அடிப்படையாக வைத்தும், உங்கள் சுய ஜாதகத்தில் ராகு, கேதுக்களின் பலமறிந்தும் செயற்படுவது நல்லது.

### அதிர்ஷ்டம் தரும் ராகு!



### சுபவிரயம் தரும் கேது!

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் இப்பொழுது 6ஆம் இடத்திற்கு வருகின்றார். இதனால் எதிர்ப்புகள், இன்னல்கள் தீரும். ஆரோக்கியம் சீராகும். அதிக வருமானம் வருவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். முன்னோர்கள் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். உத்தியோகத்தில் திடீர் உயர்வுகள் கிடைக்கும்.

விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் விரயம் ஏற்படும் என்றாலும் அதை சுபவிரயமாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கலாம். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கலாம். மேலும் 12ஆம் இடம் பயண ஸ்தானமாக கருதப்படுவதால் இடமாற்றம், ஊர் மாற்றம் போன்றவை ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய நல்ல மாற்றம் கிடைக்கும்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09. 2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கொஞ்சம்கூடுதலாக இருக்கும். குடும்பத்தினரை திருப்திப்படுத்தவும், குழந்தைச் செல்வங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும் ஒரு தொகையைச் செலவிட வேண்டியதிருக்கும். தெய்வத்திருப் பணிக்காகவும் செலவிடும் சூழ்நிலை உருவாகும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட இடத்திற்கு விரும்பிய படியே மாறுதல் கிடைக்கலாம். தொழில் புரிபவர்கள் வாடகைக் கட்டடத்திலிருந்து சொந்தக் கட்டடத்திற்கு மாறும் யோகம் உண்டு.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01. 2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த கவனம் தேவை. எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். வருமானப் பற்றாக்குறை ஏற்படும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். ஊர் மாற்றங்களும், இடமாற்றங்களும் திருப்தியளிக்காது. தொழிலில் ஏமாற்றங்களும், இழப்புகளும் உண்டு. உத்தியோகத்தில் இருந்து திடீரென விலக நேரிடலாம்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். பொருளாதார விருத்தியுண்டு. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். தந்தை வழியில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. சொந்த பந்தங்களின் அரவணைப்போடு சுபகாரியங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களுக்குச் சென்று பணிபுரிய வேண்டுமென்ற ஆர்வம் உண்டாகலாம். எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் முதலில் புதன் சாரத்திலும், பிறகு சனி சாரத்திலும், அதன்பின்பு குரு சாரத்திலும் சஞ்சரிக்கப்போகின்றார். 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்படும் கேது பகவான், இந்த காலகட்டத்தில் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வாரா என்பதைப் பற்றிப்பார்ப்போம். பாதசார அடிப்படையில் சஞ்சரிக்கும் பொழுது பகை கிரகத்தின் சாரமாகவே இருக்குமேயானால் அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்துகொண்டால்ஓளவேனும் நற்பலன்களைப் பெறமுடியும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு முயற்சி அனுகூலம் தரும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டுவந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலை உருவாகும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். 'நேர்முகத் தேர்விற்கு பலமுறை சென்றும் அழைப்பு வரவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு வேலை கிடைப்பது பற்றிய விபரம் வரலாம். பொதுவாக இக்காலத்தில் செய்யும் செயல்களில் வெற்றி அதிகம் கிடைக்கும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)




உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபுதியானவர் சனி பகவான். வாக்கு, தனம், குடும்பம், சகோதரம், வெற்றி ஆகியவற்றைக் குறிக்கும் இடங்களுக்கெல்லாம் அதிபதியாக சனி விளங்குவதால், அவரது சாரத்தில் கேது வரும்பொழுது குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். பண நெருக்கடி அகலும். துரித கதியில் வளர்ச்சி ஏற்படும். நீண்டகால எண்ணங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். ஒவ்வொரு செயற்பாடுகளிலும் குறை கண்டுபிடித்த உறவினர்கள் இப்பொழுது உறுதுணையாக இருப்பர். வெற்றிப் படிக்கட்டில் ஏற எடுத்த முயற்சிகள் அனைத்திலும் அனுகூலம் கிடைக்கும்.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)



குரு பகவான் உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். என்றைக்கோ கொடுத்த தொகை இப்பொழுது வசூலாகும். இடம் வாங்கி மனைகட்ட வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியில் வீடாகவே வாங்கும் யோகம் வந்து சேரும். அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகள் தொழில் முயற்சிக்கு கைகொடுக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும் நேரமிது. கால்நடை வளர்ப்பிலும் ஆர்வம் காட்டுவீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

6ஆம் இடத்து ராகுவால் அனுகூலங்கள் கிடைக்கவும், 12ஆம் இடத்து கேதுவால் சுபவிரயங்கள் அதிகரிக்கவும் ராகு-கேதுக்களுக்குரிய கவசம் பாடி வழிபடுவது நல்லது. பூஜையறையில் குரு தட்சிணாமூர்த்தி படம் வைத்து வியாழக்கிழமை தோறும் இனிப்புப் பொருள் நைவேத்தியமிட்டு குரு கவசம் பாடி வழிபட்டால் குடும்ப முன்னேற்றம் கூடும்.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேதுக்களின் பெயர்ச்சியின் மூலம் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வருமானம் திருப்தி தரும். ஜென்மச் சனி விலகிய பிறகு காரியங்கள் தடையின்றி நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்கேற்ற பாராட்டு கிடைக்கும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. வெள்ளிக்கிழமை தோறும் பூஜையறையில் நாககவசம் பாடி வழிபடுவதன் மூலம் சர்ப்ப கிரகங்கள் சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்)

# பாரதம்

## இந்தியாவில் குறையாத கொரோனா தொற்று ஒரு நாளில் மட்டும் 89 ஆயிரம் தொற்றாளர்கள்

(டில்லி)


இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து செல்லும் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புதிதாக 89 ஆயிரத்து 852 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 43 இலட்சத்து 67 ஆயிரத்து 436 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் புதிதாக ஆயிரத்து 107 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 73 ஆயிரத்து 923 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 33 இலட்சத்து 96 ஆயிரம் பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் 8 இலட்சத்து 97 ஆயிரம் பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (2)

## உலகின் மிகப்பெரிய சரக்குக் கப்பல் டுபாய் துறைமுகத்திற்கு



(டுபாய்)

4 கால்பந்து மைதானங்களின் அளவுடைய, உலகின் மிகப்பெரிய சரக்கு கப்பல் டுபாய் துறைமுகத்திற்கு சென்றது.

டுபாயின் ஜெபல் அலி பகுதி அமீரகத்தின் முக்கிய வர்த்தக துறைமுகம் ஆகும். ஆசியா-ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் சார்ந்த கடல் போக்குவரத்தில் இந்த துறைமுகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும் அனைத்து வகையான சரக்கு கப்பல்களை கையாளும் பிரமாண்டமான தளபாட வசதிகள் இந்த துறைமுகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. உலகின் மிகப்பெரிய சரக்கு கப்பலான 'எச்.எம்.எம்.டான்ஸ்க்', டுபாய் துறைமுகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள லண்டன் கேட்வே முனையத்தில் இருந்து இந்த துறைமுகத்திற்கு தற்போது சென்றுள்ளது.

தென்கொரிய நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த கப்பல் பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்டு அந்த நாட்டின் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. இந்த கப்பல் 1,312 அடி நீளமும், 200 அடி அகலமும் கொண்டதாகும். அதாவது 4 கால்பந்து மைதானங்களின் அளவுடைய கப்பல் இதுவாகும். இதில் மொத்தம் 20 அடி நீளமுள்ள 23 ஆயிரத்து 964 கன்டெய்னர்களை ஏற்றி செல்லமுடியும். 2 இலட்சத்து 28 ஆயிரத்து 283 கிலோ எடையை ஏற்றி செல்லக்கூடியது.

இந்த ஆண்டு கட்டுமான பணிகள் நிறைவடைந்து கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி தென்கொரியாவில் இருந்து இந்த கப்பல் தனது முதல் பயணத்தை தொடங்கியது. தற்போது டுபாயில் இருந்து சிங்கப்பூருக்கு செல்ல தயாராகி வருகிறது.

வளைகுடா நாடுகளில் ஜெபல் அலி உட்பட ஒரு சில துறைமுகங்களே இதுபோன்ற பிரமாண்ட கப்பல்களை கையாள முடியும். டுபாய் துறைமுகம் ஒரே நேரத்தில் இதுபோன்று 10 மெகா அளவுடைய கப்பல்களை கையாளும் திறன் கொண்டது. மேற்கண்ட தகவலை டுபாய் துறைமுகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி முகம்மது அல் முவல்லம் தெரிவித்தார். (2)

## மின்னொளியில் தஞ்சை பெரிய



(தஞ்சாவூர்)

மாமல்லபுரத்தை போன்று தஞ்சை பெரிய கோவிலில் ராட்சத விளக்குகளை பொருத்தி சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் இது பயன்பாட்டுக்கு வர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தஞ்சை பெரியகோவில் உலக பாரம்பரிய சின்னமாக விளங்கி வருகிறது. இந்தக் கோவிலுக்கு தமிழகம் மட்டும் அல்லாது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருப்பர். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொல்லியல் துறை பராமரிப்பில் இந்தக்கோவில் இருந்து வருகிறது.

இந்தக் கோவிலில் மராட்டா நுழைவுவாயில், கேரளாந்தகன் நுழைவுவாயில், ராஜராஜன் நுழைவு வாயில் ஆகியவை உள்ளன.

இதுதவிர 216 அடி உயர முள்ள விமான கோபுரமும் அமைந்துள்ளன. இங்கு பெருவுடையார், பெரியநாயகி அம்மன், வராகி அம்மன், விநாயகர், முருகன், தட்சிணாமூர்த்தி, நடராஜர் சந்நிதிகளும் உள்ளன.

மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர் கால குடைவரை கோவில்கள், ரதங்கள், பாறைச்சிற்பங்கள் போன்றவை மின்னொளியில் ஜொலித்து வருகின்றன.

அதேபோன்று தஞ்சை பெரிய



கலிபோர்னியாவில் கட்டுக்கடங்காமல் பரவிவரும் காட்டுத்தீயால் இதுவரை 20 லட்சம் ஏக்கர் அளவிலான பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் காட்டுத்தீயால் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். கட்டுப்படுத்தப்பட முடியாத காட்டுத் தீ 3300க்கும் மேற்பட்ட குடியிருப்புக் கட்டமைப்புகளை எரித்துள்ளதாக கலிபோர்னியா வனத்துறை மற்றும் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.





சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோகி கொலை தொடர்பாக, ஐந்து பேருக்கான மரண
சவுதி நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

கஷோகியின் மகன்கள் மே மாதத்தில் கொலையாளிகளை மன்னித்துவிட்டதாக கூறி
உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

59 வயதான வோஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளரான கஷோகி, இஸ்தான்புல்லில் உ
தூதரகத்தில் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கொல்லப்பட்டார். அ
ஆவணங்களைப் பெறுவதற்காக வளாகத்திற்குள் நுழைந்திருந்தபோதே அவர் படுகொ
குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு

## மின்னும் கோவில்



கோவிலும் விரைவில் மின்னொளியில் ஜொலிக்கும் வகையில் ராட்சத விளக்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது ஆங்காங்கே விளக்குகளை பொருத்தி அதனை எரிய விட்டு பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரிய கோவில் விமான கோபுரம், முகப்பு பகுதி, கோவில் திருச்சுற்று மண்டபம், ராஜராஜன் கோபுரம் பகுதியிலும் விளக்குகளை எரிய வைத்து சோதனை செய்து பார்த்தனர்.


புராதன சின்னத்தை ரம்மியமான விளக்கு வெளிச்சத்தில் காணும் வகையில் இந்த விளக்குகள் அமைக்கப்படுகின்றன. (2)

## தன்னை தனிமைப்படுத்திய பிரான்ஸ் பிரதமர்



பிரான்ஸ் பிரதமருடன் அண்மையில் இணைந்து பயணம் செய்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளதையடுத்து பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார். (2)

## அதிர்ஷ்டவசமாகத்தப்பினார் ஆப்கான் துணை ஜனாதிபதி



(காபூல்)

ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லாசலேவை இலக்கு வைத்து நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற வீதியோர வெடிகுண்டுத் தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக அவர் காயங்களின்றித் தப்பினார்.

ஆப்கான் தலைநகர் காபூலில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பில் நால்வர் கொல்லப்பட்டதுடன், துணை ஜனாதிபதி அம்ருல்லா சலேவின் மெய்ப்பாதுகாவலர்கள் உள்ளிட்ட 16 பேர் காயமடைந்துள்ளதாக அம்ருல்லா சலேவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கட்டாரின் தலைநகரான டோகாவில் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துக்கும் தலிபான்களுக்கும் இடையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் நேற்று ஆரம்பமாகவிருந்த நிலையில் அதற்குச் சற்று முன்னதாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு அமைப்புக்களும் உரிமை கோரவில்லை. (2)

## 9 லட்சத்தைக் கடந்தது கொரோனா உயிரிழப்பு




(ஜெனீவா)

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்தைக். கடந்துள்ளது. உலகின் 213 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த வைரஸிக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் கொரோனாவுக்கு எதிரான சரியான மருந்து இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலையில், உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதேவேளை, தற்போதைய நிலைவரப்படி, 2 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 70 இலட்சத்து 4 ஆயிரத்து 978 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 60 ஆயிரத்து 311 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் கொரோனாவில் இருந்து ஒரு கோடியே 98 இலட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-7)

## ஒக்ஸ்போர்ட் பல்கலை கொரோனா தடுப்பூசி பரிசோதனை நிறுத்தம்

(லண்டன்)

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த கொரோனா தடுப்பூசி பரிசோதனை நிறுத்தப்பட்டுள்ளது.

லண்டன் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் பல்வேறுகட்ட ஆய்வுக்குப் பிறகு கொரோனா தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராஜெனெகாவும் இணைந்து இந்த மருந்தை தயாரித்துள்ளது. இந்த மருந்தை மனிதர்களுக்கு செலுத்தும் பரிசோதனையில் முதல் 2 கட்ட பரிசோதனைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்ட நிலையில், மூன்றாம் கட்ட பரிசோதனை நடைபெற்றது.

இந்நிலையில், 3ஆம் கட்ட பரிசோதனையில், தடுப்பூசி செலுத்தப்பட்ட தன்னார்வலர் ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து தடுப்பூசி பரிசோதனை நிறுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசியை மதிப்பாய்வு செய்ய வேண்டியுள்ளதாலும், பாதுகாப்பு காரணங்களுக்காக பரிசோதனை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 'மருந்து சோதனைகளில் விபரிக்கப்படாத நோய் ஏற்படும் போதெல்லாம் இது போன்று பரிசோதனை நிறுத்தி வைப்பது வழக்கமான .நடைமுறைதான். தீவிரமாக ஆராய்ந்து, சோதனைகளின் நேர்மையை பராமரிப்பதை உறுதி செய்கிறோம்.

மிகப்பெரியளவில் சோதனைகள் செய்யப்படும் போது, சில சமயம் நோய்கள் தற்செயலாக ஏற்படும். ஆனால் அவை சுயாதீனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்' என்று அஸ்ட்ரா ஜெனெகா நிறுவன செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஆனால், பரிசோதனையின் போது பாதிக்கப்பட்டவர் எங்கு இருக்கிறார், அவரது நோயின் தன்மை மற்றும் தீவிரம் ஆகியவை குறித்து உடனடியாகத் தெரியவில்லை.

கொரோனா தடுப்பூசிக்கான 3ஆவது கட்ட சோதனைகள் மேற்கொண்டிருக்கும் 9 நிறுவனங்களில் அஸ்ட்ராஜெனெகா நிறுவனமும் ஒன்று. இந்த நிறுவனத்தின் தடுப்பூசி இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் சோதனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (2)



ன தண்டனைகளை
ரியதையடுத்து இந்த
ள்ள சவுதி துணைத்
வர் தனது திருமண
லை செய்யப்பட்டமை



இஸ்தான்புல் இரவு விடுதியொன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு 39 பேரை கொலை செய்த நபருக்கு துருக்கி நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. அரசியலமைப்பை மீறியதற்காகவும், ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட 39 பேரை கொலை செய்ததற்காகவும், 79 பேரை கொலை செய்ய முயற்சித்தமைக்காகவும் இஸ்தான்புல்லின் கடுமையான தண்டனை எண் 27 இன் கீழ் உஸ்பெக் நாட்டைச் சேர்ந்த அப்துல்கதிர் மஷரிபோவுக்கு என்பவருக்கே இவ்வாறு 1,368 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# 20 ஆவது திருத்தம்

## ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலானது

## கரு கவலை

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் அரசியலமைப்பின் 17ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்களின் மூலம் உள்வாங்கப்பட்ட பல்வேறு ஜனநாயக ஆதாயங்களை திரும்பப்பெறுவதற்கு முயற்சிக்கின்றது என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.**



அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களில் நான்கைத் தவிர அனைத்தையும் நீக்கும் வகையில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதையடுத்து, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இதனூடாக 19ஆவது திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இது ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலானது என தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை செய்துள்ள கரு ஜெயசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# சபாநாயகர் அரசியலமைப்பை மீறவில்லை

## நாமல் டுவிட்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர சத்தியப்பிரமாணம் செய்து பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள அனுமதித்ததன் மூலம் சபாநாயகர் அரசியலமைப்பை மீறவில்லை என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



மேன் முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதால் இது அரசியலமைப்பு மீறல் அல்ல என அமைச்சர் டுவிட் செய்துள்ளார்.

பிரேமலால் ஜயசேகர முன்னதாக பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு தடை ஏற்பட்டிருந்த நிலையில் இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆய்விற்குள்ளாகும் அம்பாறை கடற்கரை

(அம்பாறை)

அம்பாறை கடற்கரையோரங்களில் ஆய்வுப் பணிகளை "நாரா" நிறுவனம் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.



இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நேற்றும் என இரு தினங்களாக பெரிய நீலாவணை முதல் ஒலுவில் வரையான கடல் நீர் பகுப்பாய்வு, மீனவர்களின் வாக்கு மூலங்கள் மற்றும் பிடிக்கப்படும் மீனிடங்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஆராயப்பட்டன.

கடற்றொழில் திணைக்களத்தின். ஊடாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனையை அண்மித்த கடற் பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் பகுதி பகுதியாக வருகை தந்திருந்த நாரா நிறுவன அதிகாரிகளினால் அழைக்கப்பட்டு நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகமை (நாரா) நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சோதனை ஏன்?

"ஆண்டவன் அடிக்கடி என்னையே சோதித்துக் கொண்டிருக்கின்றான் சேர்" இது பலபேருடைய கவலை. இப்படிக் கவலைப்படுகின்றவர்களுக்கு ஆறுதலாக ஒரு கதை கிடைத்தது. (ஸ்ரீ பகவத் கிருபா என்னும் ஹிந்தி நூலில் உள்ள கதை)

அதை உங்கள் காதிலேயும் போட்டு வைக்கலாம் என்று ஒரு ஆசை. ஒரு காலத்திலே... ஒரு பெரியவர் இருந்தாராம். ஆண்டவன் அவருக்கு அடிக்கடி தரிசனம் கொடுக்கிறது வழக்கமாம். சும்மா வந்து தரிசனம் கொடுக்கிறது மட்டும் இல்லை... கொஞ்ச நேரம் உட்கார்ந்து அவரிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போவதும் வழக்கம்.

ஒரு நாள் இவரைத் தேடிக் கொண்டு ஒரு ஏழை பக்தர் வந்து சேர்ந்தாராம். வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றவர். இவர் வந்து அந்தப் பெரியவரைப் பார்த்தார். "ஏங்க? நீங்க தான் அடிக்கடி ஆண்டவனிடம் பேசிக் கொண்டிருக்கின்றீர்களே. ,எனக்காக ஒரு விடயம் அவரிடம் கேட்டுச் சொல்லக் கூடாதா? "என்றார்.

"என்ன கேட்கவேண்டும்? சொல்லுங்கள். கேட்டுச் சொல்கின்றேன்" என்றார். "அவர் ஏன், எனக்கு என்று பார்த்து கஷ்டத்திற்கு மேலே கஷ்டமாக கொடுத்துக் கொண்டிருக்கின்றார்? "என்று கேட்டுச் சொல்லுங்கள். இவ்வளவுக்கும் நான் தினமும் அவரைத் தான் கும்பிட்டுக் கொண்டிருக்கின்றேன். பூஜை செய்து கொண்டிருக்கின்றேன். இருக்கிற கஷ்டம் போதாது என்று நேர்த்திக்கு என்னுடைய சின்ன குடிசையும் இடிந்து விழுந்துவிட்டது. இப்பொழுது தங்குவதற்குக் கூட இடமில்லை... தவிக்கின்றேன் நான் என்ன தப்பு செய்தேன் என்று ஆண்டவனிடம் கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்களேன்" என்றார்.

"சரி...கடவுள் வரட்டும் கேட்டுச் சொல்கின்றேன்" என்றார் அந்தப் பெரியவர். கொஞ்சநாள் கழிச்சு ஒருநாள் பகவான் வந்தார் அந்தப் பெரியவரைப் பார்க்க. உடனே இவர் அந்த ஏழை பக்தர் சொன்ன விடயத்தைப் பத்தி ஆண்டவனிடம் கேட்டார். இதற்கு நான் பதில் சொல்கிறேன்... ஆனால் அதற்கு முன்னாடி நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றார் கடவுள்.

"என்ன செய்ய வேண்டும்? "என்றார் இவர். "ஒரு செங்கல் வேண்டும்" என்றார். உடனே அந்தப் பெரியவர் புறப்பட்டு பக்கத்து டவுனுக்குப் போனார். அங்கே பார்த்தா எல்லாம் பெரிய பெரிய கட்டடமாக இருக்கு. அதிலேயிருந்து செங்கல்லை எடுக்க இவருக்கு மனசு வரவில்லை.

இவரு இப்படி பார்த்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தார். அங்கே- பாதி இடிந்துபோன ஒரு வீடு. மீதியும் எப்பொழுது இடிந்து விழலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தது.

இவர் போய் அதிலேயிருந்து ஒரு செங்கல்லை பிடித்து இழுத்தார். இவர் இழுத்த வேகத்திலே மீதி கட்டடமும் பொலபொல என்று கொட்டிப் போய் விட்டது. இவர் அதைப் பற்றி கவலைப்படவில்லை. அந்த ஒரு செங்கல்லை எடுத்துக் கொண்டு வந்து கடவுளிடம் கொடுத்தார்.

"இந்தக் கல்லை எங்கே இருந்து எடுத்துக் கொண்டு வந்தாய்?" என்றார். இவர் விவரம் சொன்னார்...ஒரு பழைய வீட்டிலேயிருந்து எடுத்துக் கொண்டு வந்தேன் என்று.

ஏன் அங்கேயிருந்த பெரிய கட்டடங்களிலிருந்து எடுக்கவில்லை? என்று கேட்டார். "அது எல்லாம் நல்ல கட்டடமாக இருந்தது. அதிலே எடுத்தா அதனுடை அழகு கெட்டுவிடும். பழைய வீட்டிலேயிருந்து எடுத்தது நல்லதாப் போய் விட்டது. இப்பொழுது அங்கே ஒரு புதுவீடு கட்டிவிடுவார்களே" என்றார். இதன்பின் ஆண்டவன் விளக்கம் கொடுத்தார்.

" நான் அந்த பக்தனுக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டமா கொடுத்துக் கொண்டிருந்தது இதே காரணத்திற்காகத்தான். அவனுக்கு வைராக்கியம் அதிகரிக்க வேண்டும் என்கிறதுக்காகத்தான் இப்படி செய்கின் றேன். கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர் புதுமனிதனாக ஆகிவிடுவான்" என்றார். இது தான் அந்தக் கதை. இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால்... துன்பத்தைக் கண்டு துவண்டு போய்விடக் கூடாது. துன்பம் வரும்போது நமக்கு மன உறுதி வரவேண்டும். அந்த மன உறுதியை துணையாக வைத்துக் கொண்டு நாம் புது மனிதனாக மாறவேண்டும்.

"ஐயோ கஷ்டம் வந்துவிட்டதே" என்று நாம் தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டால் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டியது தான். எங்களுடைய ஆள் ஒருத்தர் இருக்கார். தான் ஆண்டவனுக்கு மிகவும் நெருக்கம் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அவரிடமும் ஒரு ஆள் வந்து ஆண்டவன் ஏன் என்னை இப்படி சோதிக்கின்றார்? என்று கவலையோடு கேட்டிருக்கின்றார். உடனே இவர் தன்னையே ஆண்டவனாக நினைத்துக் கொண்டு "ஒரு செங்கல் எடுத்துக் கொண்டு வா...சொல்கின்றேன்" என்றார். இவர் போனார்.. ஒரு வண்டி செங்கல்லை கொண்டு வந்து அவர் முன்னாடி கொட்டினார். உடனே அவரும் ஆண்டவன் மாதிரியே அதற்கு விளக்கம் கொடுத்தார். கஷ்டம் வருகின்ற பொழுது மனதுக்கு ஒரு வைராக்கியம் வரவேண்டும் என்றார்.

எனக்கு அந்த வைராக்கியம் இப்பொழுது வந்துவிட்டது உங்களுக்கு வந்துவிட்டதா? என்றார். என்னது என்னையே பார்த்து அப்படி கேட்கி றாய்? என்றார் அந்த பெரியவர். இடிந்து போன வீட்டை திருப்பி கட்ட வேண்டியது நீங்க தான். ஏன் என்றால் இவ்வளவு செங்கல்லும் உங்கள் வீட்டிலே இருந்து தான் பேர்த்து எடுத்துக் கொண்டு வந்தேன்.. என்றார்.

# தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மீள்குடியேறவும் விவசாயம் செய்யவும் தொடர்ந்து அனுமதி மறுக்கப்படுகிறது

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு ஆகிய பகுதிகளில் 601 தமிழர்களுக்குச் சொந்தமான 2 ஆயிரத்து 524 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்களில் தமிழர்கள் மீளவும் குடியமரவும் விவசாயம் செய்யவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, நிதி அமைச்சின் செயலாற்று அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

போருக்குப் பின்னரான காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பொருண்மியச் சுமைகள் அவர்களை தற்கொலைக்குத் தள்ளுகின்றன. அரசாங்கம் இவ்விடயத்தில் கவனம் செலுத்தித் தடைகளை அகற்ற முன்வரவேண்டும்.

போருக்குப் பின்னரான காலத்தில், வடக்கு-கிழக்கில் கடன் பிரச்சினை என்பது அதிலும் குறிப்பாக நுண்கடன் தொடர்பான பிரச்சினைகள் மக்களைத் தற்கொலைக்குத்தூண்டுமளவிற்கு மோசமானதாக உருவெடுத்துள்ளன.

இப்பிரேரணையானது 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 வரையான காலப்பகுதியில் பொருளாதாரப் பிரச்சினைகளைக்குறித்து நிற்கிறது. ஆனால் நுண்கடன் தொடர்பான பிரச்சினை 2009 இல் போர் முடிவுற்ற காலத்திலேயே ஆரம்பித்து விட்டது.

வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள், முக்கியமாக தமிழ் மக்கள் பொருண்மியத்தில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு முற்போக்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

அதற்கு மாறாக அப்போதைய அரசாங்கம் இவ்விடயத்தையிட்டு பாராமுகமாகவே இருந்தது.

இந்த நிலையில் திடீரெனத் தோற்றம்பெற்ற நுண்கடன் வழங்கும் நிதிநிறுவனங்கள் வழங்கிய கடனில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு அங்குள்ள மக்கள் தள்ளப்பட்டார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு ஆகிய பகுதிகளில் 601 தமிழர்களுக்குச் சொந்தமான 2 ஆயிரத்து 524 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்தில் மக்கள் மீளக்குடியமரவோ, சுதந்திரமாக விவசாயம் செய்யவோ முடியாத நிலையிலிருக்கிறது.

உறுதிப் பத்திரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் உள்ளதுமான மேற்படி 2524 ஏக்கர் நிலங்களில் 784 ஏக்கர் நிலம் அந்தப் பகுதியைச் சேராத சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இது தமிழ் மக்களின் உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள ஆமையன்குளம், முந்திரி கைக்குளம், சாம்பன் குளம், மணற்கேணி ஆகிய பகுதிகளில் உறுதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் உள்ள தமது



காணிகளுக்கு அதன் உரிமையாளர்கள் செல்வதற்கு அப்பகுதியிலுள்ள இராணுவம் அனுமதி வழங்க மறுத்துவருகிறது.

ஆனால் இக்காணிகளில் பயிர் செய்வதற்கு சிங்களமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச் சிங்கள மக்களுக்கு இக் காணி தொடர்பில் எதுவித உரிமையும் கிடையாது.

மீதியாகவுள்ள 1,740 ஏக்கர் நிலம் மகாவலி எல் வலயத்திற்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. காணி ஆணையாளர் நாயகத்தின் 2013/1 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் இந்நிலங்களுக்கான உரிமப்பத்திரங்களை வழங்குவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகமானது, நடவடிக்கை மேற்கொள்ள முற்பட்டபோது மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இவ்விடயத்தில் தலையிட்டு இந்நிலங்கள் தங்களது அதிகாரசபைக்கு உட்பட்டவை எனவும் பிரதேச செயலாளர் பணியகத்திற்கு இவ்விடயத்தில் தலையிடுவதற்கான அதிகாரமில்லை எனவும் கூறி காணிகளுக்கான உரிமம் வழங்குவதனைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த நிலைமை வவுனியா வடக்கில் நெடுங்கேணி, மருதோடை, பட்டிக்குடியிருப்பு, கட்டுக்குளம், மன்னன்குளம், புளியங்குளம் வடக்கு, காஞ்சுரமோட்டை, விண்ணாங்குப்பிட்டி ஆகிய பகுதிகளிலும் தொடர்கிறது. இங்கு தமிழ் மக்களுக்குரிய 960 ஏக்கர் காணிகளில் பயிரிடுவதற்கு இராணுவம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

மத்திய வங்கியின் இவ்வறிக்கை கவனத்திலெடுக்கப்பட வேண்டுமாயின் இப்பகுதிகளிலுள்ள மக்கள் நடைமுறையில் எதிர்நோக்கி வருகிற பொருண்மிய பிரச்சினைகள் கவனத்திலெடுக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.

மக்கள் தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்றால் இங்கு ஏதோ தவறு இருக்கிறது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4-350)

# வெள்ளத்தில் மூழ்கியது கொழும்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகக் கொழும்பில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பல வீதிகள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையுடன் பலத்த காற்று வீசி வருவதால் கொழும்பின் முக்கிய வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வீதியோரங்களில் உள்ள மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

கொழும்பின் கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, வோட் பிளேஸ், பேஸ்லைன் மற்றும் தும்முல்ல உள்ளிட்ட முக்கிய வீதிகளில் வெள்ளநீர் நிரம்பியுள்ளது.

இந்நிலையில், கொழும்பு - நவகம்புர பகுதியில் குடியிருப்புகளுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது. (2-7)





# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சகல உரிமையும் பிரேமலாலுக்கும்

## எடுத்துரைத்த சபாநாயகர்

(கொழும்பு)

மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினராக பிரேமலால் ஜயசேகர பதவிப்பிரமாணம் செய்துள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சகல உரிமையும் அவருக்கும் உள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன தெளிவுபடுத்தினார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதற்கு எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அரசியலமைப்பின் குறித்த சரத்தை சபையில் வாசித்துக் காட்டி சபாநாயகர் மேற்கண்டவாறு தெளிவுபடுத்தினார். (2-7)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

63

கலாநிதி முருகர் குணசிங்கம்

அந்தந்த நாடுகளில் வாழும் ஈழத் தமிழரின் மக்கள் தொகையைப் பொறுத்துப் புள்ளி விபரங்கள் மாறுபடுதே தவிர கல்வி, தொழில் நிலைமைகள் ஒரே தன்மை கொண்டதாகவே காணப்படும்.

அதனால் விரிவு அஞ்சியும் கூறியது கூறலைத் தவிர்ப்பதன் பொருட்டும் ஏனைய நாடுகள் தவிர்க்கப்படுவதே உகந்தது.

மேற்கொண்டு தமிழர்களது பொருளாதார அடித்தளம் **(Ecanomic foundation)** பொருளாதார வளர்ச்சி பற்றிப் பொதுவாகவும் சுருக்கமாகவும் நோக்குவதாக இந்தப் பகுதி அமைகின்றது.

சமூக, சமய, மொழி, கலை, கல்வி, தொழில் நிலைமைகளின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தமது பொருளாதார அடித்தளத்தை வளர்த்திட மேற்கொண்ட முயற்சிகளைக் காண்போம்.

முக்கியமான நாடுகளில் உள்ள பொருளாதார நிலைமைகள் கலந்துரையாடுவதன்மூலம் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி குறித்துக் குறைந்த அளவு அறியக்கூடியதாக அமையும்.

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழர்களின் பொருளாதார வளம் பற்றிக் கூறுவதற்கு எதுவும் இல்லை.

அவர்கள் பொதுவாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். பலர் வெளிநாட்டு வருமானம் உள்ளவர்கள்.

அத்தோடு 1980களில் வந்தவர்களில் பலர் நடுத்தர மேற்தட்டு நிலைமைகளில் உள்ளவர்களும் காணப்படுகின்றனர்.

மேற்கண்ட பிரிவினர் தமிழ்நாட்டில் சொந்தமான வீடுகளில் வாழ்கின்றனர். 1980களில் வாங்கிய வீடுகளின் பெறுமதி தற்பொழுது பன்மடங்காக உயர்ந்து காணப்படுகின்றது.

இவ்வாறு பெறுமதிவாய்ந்த சொத்துக்களை ஈழத்தமிழர்கள் வைத்துள்ளார்களே தவிர வேறு விதமான பொருளாதார அடித்தளங்கள் எதையும் அவர்களால் செயற்படுத்திட முடியாமற் போய் விட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மலேசியத் தீபகற்பத்திற்கும் சிங்கப்பூருக்கும் சென்ற ஈழத் தமிழர்கள் சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு நிரந்தரமாக வாழ்கின்றனர்.

அவர்கள் எல்லோரும் சொந்தமாகப் பெறுமதி வாய்ந்த வீடுகளை வைத்திருப்பார்கள்.

நான்கு தலைமுறைகளுக்கும் மேலாக அங்கு அவர்கள் வாழ்ந்து வருவதால் அவர்களது வீடுகளின் பெறுமதி இன்றுள்ள நிலைமைகளில் கோடிக்கணக்கில் உயர்ந்து இருக்கும்.

சிங்கப்பூரில் அவ்வாறான நிலைமையே காணப்படும்.

அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களுள் 90 வீதத்திற்கும் மேலானவர்கள் சொந்த வீடுகளில் வாழ்பவர்கள்.

பலர் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளையும் சொந்தமாக வைத்து இருக்கின்றனர். ஆனால் பிரித்தானியா, கனடா போன்ற ஆங்கிலமொழி பேசும் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் எல்லோரும் சொந்தமாக வீடுவாங்கக் கூடிய நிலைமை இல்லை.

காரணம் அவர்களில் 1980களிற்குப் புலம்பெயர்ந்து சென்றவர்கள் பல்வேறு மட்டத்தினர்களாகவும் அதிகமானோர் வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் கல்வித் தகைமை குறைந்தவர்களாகவும் இருந்தமையால் அவர்களால் அதிகப் பணம் முதலீடு செய்து வீடுகளைச் சொந்தமாக வாங்கவோ வங்கிகளில் கடன் பெறவோ இயலாமற் போயிருக்கலாம்.



சிட்னி முருகன் ஆலயம்

இதன் விளைவாக மேற்கண்ட நாடுகளில் சுமார் 50 வீதத்திற்கும் குறைவானவர்களே சொந்தமாக வீடுகளை வைத்து இருப்பதைக் காண முடிகிறது.

அதேபோன்று ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்க தொகையினரே சொந்தமாக வீடு வாங்கி வாழ்கின்றனர்.

மேற்கண்ட நாடுகளில் இன்றும் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையினர் நிரந்தர வதிவிட அனுமதி இல்லாது இருப்பதாலும் அவர்களால் சொந்தமாக வீடு வாங்க முடியவில்லை. ஆனால் நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களில் சுமார் 85 வீதத்தினர் சொந்தமாக வீடு வாங்கி வாழ்கின்றனர்.

அவர்கள் ஈழத்தில் பொதுவாகத் தமது சொந்த வீடுகளில் வாழ்ந்து வந்தவர்கள்.

சொந்த வீட்டில் வாழ்வது அவர்களுடைய இயல்பு. சமூக அந்தஸ்து போன்ற உளவியல் காரணங்களாலும் அவர்கள் சொந்த வீடு வாங்கி அதில் வாழ வேண்டும் என்ற இலட்சியம் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

அவர்களின் கடின உழைப்பு,சேமிப்புப் பழக்கம், இலட்சியம்,நோக்கம் இவை அனைத்தும் சேர்ந்து புலம்பெயர்ந்து அவர்கள் வாழுகின்ற நாடுகளிலும் சொந்த வீடுகளை வாங்க உதவின.

அவ்வாறான முயற்சிகள் ஈழத்தமிழர்களின் பொருளாதார நிலைமைகளில் ஒரு நல்ல அடித்தளத்தை அமைத்து இருக்கின்றது என்றே கூற வேண்டும்.

சொந்த வீட்டில் வாழ்வது எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அதேபோன்று அவர்கள் தாம் வாழும் ஊரில் தமது தெய்வங்களுக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்வதையும் முக்கியமாகக் கருதுபவர்கள்.

அதன் விளைவாக இந்தியா தவிர்ந்த தாம் வாழும் ஏனைய அயல் நாடுகளில் எல்லாம் கோயில் கட்டி வழிபாடு செய்து வருகின்றார்கள் என்பது பற்றி இதற்கு முந்தைய அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டது. சைவ ஆகம முறைப்படி கோயில் கட்டுவதென்றால் அதற்கு பரந்து விரிந்த இடம் வேண்டும்.

பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கு சென்று வழிபாடு செய்யவும் திருவிழாக்கள், திருமணக் கொண்டாட்டங்கள், கோயில் உற்சவத்தின்போது கடவுளைத் தேர் ஊர்வலம் கொண்டு செல்வதற்குத் தேவையான இட வசதி வேண்டும்.

மேலைத்தேச நாடுகளில் காணியின் விலை மிகவும் அதிகம் ஆகும். ஆனால் ஈழத்தமிழர்கள் சிறிது சிறிதாகப் பணத்தைச் சேர்த்தும் வங்கிகளில் கடன் எடுத்தும் மிகப்பெரிய நிலத்தை வாங்கி மிகப் பிரமாண்டமான கோயில்களைக் கடந்த கால் நூற்றாண்டுகளுக்குள் கட்டி முடித்து இருக்கின்றனர்.

இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நாடுகளில் எல்லாம் சுமார் 200 இற்கு மேற்பட்ட கோயில்களை வெற்றிகரமாகக் கட்டி முடித்துள்ளனர்.

சில கோயில்கள் தனிப்பட்ட செல்வம் படைத்தவர்களாலும் கட்டப்பட்டு உள்ளன. அவற்றில் பல கோடிக்கணக்கான பணம் முதலிடப்பட்டு இருக்கும்.

அவை யாவற்றையும் புலம்பெயர்ந்து வாழும் சைவத் தமிழர்களின் நிரந்தரமான தேசியச் சொத்தாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நாளாந்தம், மாதாந்தம், வருடாந்தம் என ஆண்டு முழுவதும் ஆயிரக்கணக்கில் சைவத்தமிழர்கள் கோயில்களுக்குச் சென்று காணிக்கைகள் வழங்கி வழிபட்டு வருகின்றனர்.

பணமாகவும் தங்க நகைகளாகவும் அள்ளி அள்ளிக் கொடுக்கின்றனர். அவை தவிர திருமண விழாக்கள், பிற நிகழ்வுகள் இக்கோயில்களில் நடக்கும் போதெல்லாம் ஆயிரக்கணக்கில் வருமானம் கோயிலுக்குப் போய்ச் சேருகின்றது.

சுருங்கக்கூறின் கோயில்களின் ஆண்டு வருமான்ம் பல இலட்சங்களாக இருப்பதாகக் கோயில் நிர்வாகிகளின் மூலம் அறிய முடிகிறது.

எனவே கோயில்கள் வெறுமனே வழிபாட்டுத் தலமாக மட்டும் அல்லாமல் பணம் சேகரிக்கும் மையங்களாகவும் காணப்படுகின்றன.

ஈழத்தமிழர்கள் கோயில் கட்டி வழிபடுவதன் ஊடாக அந்தந்த நாடுகளில் ஒரு நிரந்தரமான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தியதோடு கோயில்களை அதிக நிரந்தர வருமானம் பெறும் தேசிய வங்கிகளாகவும் அமைத்து தமது பொருளாதார அடித்தளத்தை மென்மேலும் விருத்தியடையச் செய்யும் நிரந்தர வருவாய்த் துறையாகவும் ஆக்கி இருக்கின்றனர்.

ஒட்டுமொத்த சைவத் தமிழர்களின் தியாகமும் கடும் உழைப்பும் தொடர்ச்சியான பங்களிப்புமே இத்தகைய சாதனைகளுக்கெல்லாம் மூலதனம் ஆகும்.

வீடுகளிலும் கோயில்களிலும் முதலீடு செய்வதற்கும் மேலாகத் தமது பிள்ளைகளின் கல்வியில் முதலிடுவது ஈழத்தமிழர்களின் மிக முக்கியமான குறிக்கோள் ஆகும்.

தமது பிள்ளைகளுக்குத் தாம் வாழும் நாடுகளில் அந்நாட்டுக் கல்வியைப் போதிப்பதற்கு அதிகபட்சம் அக்கறை காட்டுவதற்காகப் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்வதுபோல் அந்நியச் சூழலில் வாழும் தமது பிள்ளைகளுக்குத் தாய் மொழியாகிய தமிழைப் புகட்டுவதற்கும் பெருமளவு பணத்தை முதலிடுகின்றனர்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் தவிர்ந்த ஏனைய பதின்மூன்று நாடுகளிலும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வார இறுதி நாள் தமிழ்ப் பாடசாலைகளைப் பெரும்பாலும் அரசாங்கப் பாடசாலைக் கட்டடங்களிலும் சிறுதொகையிலான தமிழ் பாடசாலைகளைச் சொந்தமாகவும் உருவாக்கிய கட்டடங்களிலும் நடத்தி வருகின்றனர்.

(தொடரும்)

# விவசாயத்தில் புரட்சி ஏற்படுத்த திட்டம்

# செயற்கை பசளைகளை குறைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

**விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் பரிந்துரையின் அடிப்படையில் எமது நாட்டிற்குப் பொருத்தமான பசளைகளை தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**



எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு பாரிய விவசாய புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ள நிலையில் ஜனாதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

இதற்காக நாட்டில் தரிசு நிலங்களாக இருக்கக்கூடிய பாரிய நிலங்களை உள்வாங்கி பல ஆண்டுகளுக்கு பிறகு நாட்டில் நெல் உள்ளிட்ட பெரும்போக பயிர்களை மீண்டும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டிற்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசளைகளுக்கான கொடுப்பனவுகள் முறையாக செலுத்தப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்ட மற்றும் பெரும்போக விவசாயிகளுக்கு தேவையான பசளைகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நேற்றுமுன்தினம் பசளை உற்பத்தி விநியோகம் தொடர்பான அமைச்சுடன், அதன் எதிர்கால திட்டங்கள் குறித்து ஆராயும் விசேட கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், பசளை தேவையைக் கருத்தில் கொண்டு, அவசியமான பசளையை தடையின்றி இறக்குமதி செய்வதற்கு அரச மற்றும் தனியார் துறையினருக்கு முறையான பின்னணி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இறக்குமதி பசளையில் தொடர்ந்தும் தங்கியிராது. நாட்டிற்கு தேவையான பசளையை தயாரிப்பதற்கும் நடவடிக்கை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பசில் ராஜபக்ஷ, ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஆராய்ச்சி நிறுவனங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், நாட்டுக்கு பொருத்தமான பசளைகளை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதேவேளை, நாட்டில் பெரும்போகத்திற்காக பயன்படுத்தப்படும் இரசாயன பசளைப் பாவனையை இந்த ஆண்டுக்குள் 25 வீதத்தினால் குறைக்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (2-7)

## சாணக்கியனுக்கு உயர்பதவி

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டக்களப்பு மாவட்ட இளம் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு சபாநாயகர் குழுவில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது பிரதி சபாநாயகர் அல்லது குழுக்களின் தலைவர் அமர்வில் பிரசன்னமாகாத சந்தர்ப்பத்தில் அவையை கொண்டு நடத்தும் பொறுப்பு இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தனது பாராளுமன்ற கன்னி உரையில் பாராளுமன்றத்தில் மும்மொழியிலும் உரையாற்றிய சாணக்கியன் பலரது கவனத்தினையும் ஈர்த்திருந்தார்.

இதேவேளை சாணக்கியன் குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற சாணக்கியனுக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்துத் தெரிவித்து வந்தனர்.

சமூக வலைத்தளங்களிலும் அவரது கன்னியுரை வைரலாகியிருந்த நிலையில் பாராளுமன்றத்தில் தற்போது அவருக்கு வழங்கப்பட்டுள்ள குறித்த உயர் பதவியானது அவருடைய மும்மொழி திறமைக்கும் ஆளுமைக்கும் கிடைத்துள்ள அங்கீகாரமாக பார்க்கப்படுகின்றது.



நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது சிறிது நேரம் பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## மட்பாண்டங்களுக்கு கேள்வி அதிகரிப்பு

(கொழும்பு)



மட்பாண்டத் தொழிலுக்கு தற்போது சந்தையில் கேள்வி எழும்பியிருப்பதாக இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

மேலும் மட்பாண்டத் துறையில் காணப்படுகின்ற சிறுசிறு பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மட்பாண்ட உற்பத்தியை அதிகரிப்பதனூடாக சந்தையில் அதிக வாய்ப்புக் களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சந்தை வாய்ப்பினை அதிகரிக்க பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் மூலப் பொருட்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (ஜ-6)

# போலி சாட்சியங்களால் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறேன்

# எனக்கு நியாயமான ஒரு தீர்வு வேண்டும்-பிரேமலால்



(கொழும்பு)

அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்கிலே எனக்கு எதிராக போலி சாட்சியங்களை சோடித்து மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக முழு விசாரணை நடத்தி எனக்கு நியாயம் பெற்றுத்தரவேண்டும் என இரத்தினபுரி மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மத்திய வங்கி அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிமன்ற உத்தரவைடுத்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்த அவர் தனது கன்னி உரையில் மேலும் தெரிவித்ததாவது.

நான் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். சீசீரீவி காட்சிகளை சோடித்து சாட்சி தயாரித்து என்னை சி.ஐ.டி குற்றவாளியாக்கியது. இதற்கு சானி அபேசேகர முன்னின்று செயற்பட்டார். சில பொலிஸாரும் இதற்கு பங்களித்தார்கள். இவர்களை கைது செய்து உரிய விசாரணை நடத்தி எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும். எனக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது . நான்கு பிள்ளைகளின் தந்தையான நான் இந்த கொலையை செய்யவில்லை. அது எனது மனசாட்சிக்கு தெரியும். எனக்கு பாராளுமன்றம் வர நீதிமன்றம் அவகாசம் அளித்துள்ளது. அதற்கு நீதிமன்றத்திற்கும் சபாநாயகருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும் எனக்கு அரசியல் ரீதியில் பழிவாங்கல் நடைபெற்றது. நான் எனது அரசியல் வாழ்வில் ஐந்து சதம் கூட மோசடி செய்தது கிடையாது. 2001முதல் 2020வரை தேர்தல்களில் நாங்கள் பெற்றுக் கொண்ட வெற்றி இதனை ஒப்புவிக்கின்றது. நிவித்தகல தொகுதியை வெற்றிகொள்ள முடியாததன் காரணமாகவே எனக்கு எதிராக போலி சாட்சியங்களை தயாரித்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த அரசாங்கத்தில் நீதி அமைச்சராக இருந்த தலதா அத்துகோரள, எனக்கு மரண தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் அமைச்சுப்பதவியை துறந்து கொழுந்து பறிக்கச்செல்வதாக தெரிவித்திருந்தார். இதன்மூலம் இவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளில் எந்தளவு தலையீடு செய்திருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# 110 தோட்டாக்கள் மீட்பு



(திருமலை)

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சூடக்குடா பிரதேசத்தில் கடற்படை முகாமிற்கு அருகில் மணலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 110 தோட்டாக்களைப் பொலிஸார் மீட்டனர்.

நேற்றுச் சம்பூர் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இத் தோட்டாக்கள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட தோட்டாக்கள் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படுபவை எனவும் தோட்டாக்கள் புதைக்கப்பட்ட இடம் யுத்தகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைத் தளம் இருந்த இடம் எனவும் அவர்களே தோட்டாக்களைப் புதைத்து வைத்திருக்கக்கூடும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-4)

# போதைப்பொருளை ஒழிக்க பொலிஸார் மும்முரம்

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருளை முற்றாக ஒழிப்பதற்கு பொலிஸார் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். இதனால் ஹெரோயின் அதிகரித்த நிலையில் விற்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நாட்டில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் கடத்தல் செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் குறித்த சோதனை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலுக்குத் துணையாகவுள்ள அதிகாரிகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# தமிழீழ வங்கிகளில் வைத்திருந்த நகைகளுக்கு நடந்தது என்ன?

## சிறீதரன் கேள்வி



**(கொழும்பு)**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், தமிழீழ வங்கிகளில் தமிழ் மக்கள் வைத்திருந்த தங்க நகைகளை அரசாங்கம் அபகரித்தது, எமது மக்களின் தங்கங்களை ஏன் மீண்டும் எமது மக்களுக்கு கொடுக்க மறுக்கின்றீர்கள், அந்த தங்க நகைகளுக்கு என்ன நடந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சபையில் கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, நிதி அமைச்சின் .செயலாற்றுகை அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்கள் நுண்கடனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்தைக் காரணங்காட்டி வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் பொருளாதார வசதிகள், அபிவிருத்திகளைக் கடந்த அரசாங்கங்கள் செய்யவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கவில்லை.

கிளிநொச்சியில் 7 பேர் நுண்கடன் திட்டங்களால் தற்கொலை செய்திருக்கிறார்கள்.

எனவே இது எவ்வளவு பாரதூரமான விடயம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2111

Search for people, places and things

### சர்வன்



எல்லா தாய் தந்தையின் பார்வையிலும் உலகின் மிகச்சிறந்த குழந்தை தன் பிள்ளை

### லக்ஸ்மன்

செத்ததுக்கு அப்புறம் நீ வெறும் சாம்பலா மட்டும் இருக்கக்கூடாது. சாம்பிளாகவும் இருக்கனும்...



### டியுக்ஷன்



எம்மில் இருக்கும் சிறு நல்ல குணங்கள் கூட எம்மில் குறைகளை மாத்திரமே தேடுபவன் கண்களில் தீயவையாகி தென்படாது போகின்றது.

### கலாதேவி

வாழ்க்கையை வெறுக்க ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் வாழ்வதற்கு ஒரே காரணம் நாளை எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை மட்டும் தான்.



### பகலவன்



தேவையுடையவர்களை தேடிச் செல்வது தான் மனிதம் புகுந்த உயரிய கைகள் தான்.

### ஆரத்யா

கோபப்பட்டு வென்று விட்டாய் என்றால் உன் கோபம் பெரிது என்று அர்த்தமல்ல.



அதைத் தாங்கிக் கொண்டவர்களின் பொறுமை பெரிது என்றே அர்த்தம்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


# ஆன்மீகம்

## பொன்னான நேரம் மண் ஆகலாமா?

"ஏதோ பேருக்கு இந்த உலகில் வாழ்ந்து விட்டு, திரும்பி வராத பயணத்தில் ஒருநாள் சேர்ந்து கொள்வதற்காகவா இந்த மானிட தேகம்?" என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்! நமக்கு வாய்த்திருக்கும் இந்த உடம்புதானே சாதனைகள் பல செய்து சரித்திரத்தில் புகழ்பெற்ற சான்றோர்களுக்கும் வழங்கப்பட்டது. அவர்கள் இந்த மனித குலத்திற்கே வழிகாட்டிகளாகத் திகழும் போது நாம் வீண்பொழுதுபோக்கி அதனைப் புறக்கணிக்கலாமா? மாலை நேரம் கடைத்தெருவில் வலம்வரும் பலரைப் பார்த்து 'என்ன, இந்த கடைப் பக்கம்?' என்று கேட்டுப் பார்த்தால் அவர்கள் சொல்லும் பதில் பொதுவாக இப்படித்தான் இருக்கும். 'வீட்ல பொழுது போகல சேர்! காலையில எழுந்து, பேப்பர் படிச்சு, குளிச்சு, சாப்பிட்டு பின் மத்தியானம் தூங்கி எப்படியோ பொழுதை ஓட்டிடறேன்.

சாயங்காலமாவது சும்மா இப்படிக் கடைவீதி வந்து, நண்பர்கள் எதிர்ப்பட்டா சிரிச்சு கதை பேச வேண்டாமா? அதான் தினசரி சாயங்காலம் இந்தப் பக்கம் வருவேன். ரயில்வே பிளாட்பாரத்துக்குப் போனா என்னை மாதிரியே பத்து பன்னிரெண்டு பேர் 'க்ரூப், க்ரூப்பாக' உக்காந்து கிட்டே இருப்பாங்க. அங்கேயும் போயி அரட்டையில் கலந்துக்குவேன். வேஸ்ட்டா வீட்ல இருக்கிறது எனக்குப் பிடிக்காதுங்க.' இப்படிப்பட்ட பலரை அன்றே பார்த்ததால்தான் பாரதியார், 'தேடிச் சோறு நிதம் தின்று - பல சின்னஞ்சிறு கதைகள் பேசி... கூற்றுக்கு இறை எனப் பின்மாயும் பல வேடிக்கை மனிதர்' என்று பாடுகிறார். 'நடந்தார், உடுத்தார், நரைத்தார்' என்னும் சொல்லாய் நம் வாழ்வு கழிந்து விடலாமா?' என்று எச்சரிக்கிறது தேவாரம்.

வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் நமக்கு வரப்பிரசாதமாக வழங்கப்பட்டிருக்கிறது. பயனின்றி நேரத்தைச் செலவு செய்பவன் தன் வாழ்வையே அல்லவா இழந்து விடுகிறான். பண்டித ஜவஹர்லால் நேரு 'நேரம் போதவில்லையே!' என்று அவ்வப்போது வருந்திச் சொல்வாராம். அவரின் பேச்சில் பல புத்தகங்களில் உள்ள அரிய செய்திகள் மேற்கோள்களாக வருவதைப் பார்த்த பலர் கேட்டனராம். 'நேரம் போதவில்லை' என்று சொல்லிக் கொண்டிருக்கும் தங்களுக்கு இத்தனை புத்தகங்கள் படிப்பதற்கு மட்டும் எங்கிருந்து நேரம் கிடைத்தது?' அதற்கு நேரு சொன்ன பதில் என்ன தெரியுமா? 'திருடுகிறேன்.' 'திருடுகிறீர்களா? புரியவில்லையே



நீங்கள் சொல்வது?' என்றனர் கேள்வி கேட்டவர்கள்.

'என் உதவியாளர் நான் உறங்குவதற்கு ஐந்து மணிநேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். நான் தினசரி அதிலிருந்து இரண்டு மணிநேரம் திருடிப் படிப்பதற்கு என்று எடுத்துக்கொள்கிறேன்' என்றார். உறக்கத்தைக் குறைத்துக் கொண்டு நேரத்தைப் பொன்னாக்கிய நேரு எங்கே! மண்ணாக்கும் நாம் எங்கே?

**'வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃது ஒருவன்**
**வாழ்நாள் வழி அடைக்கும் கல்'**

- என்கிறார் திருவள்ளுவர். முன்னாள் குடியரசுத் தலைவர் அண்மையில் அமரர் ஆன நம் அப்துல்கலாம் என்ன சொல்லிச் சென்றார் தெரியுமா? 'நம் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால், நம் இறப்பு ஒரு சரித்திரமாக அமைய வேண்டும்.' விநாடி நேரத்தையும் வீணாக்காமல் மணித்துளி ஒவ்வொன்றையும் சிப்பிக்குள் விழும் மழைத்துளிபோல மாற்றுபவர்களின் கழுத்தில்தான் காலம் தன் முத்துமாலையைச் சூட்டுகிறது. 'இன்னம்பர்' என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பயனின்றி பொழுதுபோக்கிக் காலத்தைக் கழிப்பவர்கள் யார் யார் என்று கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றான் என்கிறது திருமுறை:

**'பொழுது போக்கிப் புறக்கணிப்பாரை**
**எழுதும் கீழ்கணக்கு இன்னம்பர்**
**ஈசனே!'**

ஒரு கோடீஸ்வர முதலாளி தன் தொழிலாளியைப் பார்த்துச் சொன்னார். 'தினசரி உனக்கு 86,400 ரூபாய் செலவு செய்யத் தருவேன். ஆனால், நான் தரும் ரூபாய் அனைத்தையும் அன்றன்றே செலவு செய்துவிட வேண்டும். சேமித்து வைக்க உனக்கு அதிகாரமில்லை.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## சீரற்ற வானிலை மேலும் தொடரும்

(கொழும்பு)

நாட்டின் தென்மேற்கு மற்றும் வடமேல் மாகாணத்திலும் நிலவும் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று முன்தினம் இரவு விடுத்துள்ள அறிவிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களினதும் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மின்னல் தாக்கங்களில் இருந்தும் ஏனைய அனர்த்தங்களில் இருந்தும் பாதுகாப்பாக இருக்கும் வகையில் பொதுமக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (ஜ-4)

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நடைபாதையில் வாகனம் நிறுத்தப்பட்டால் அதனை அகற்றும் போது சேதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான செலவினை பொலிஸார் ஏற்கமாட்டார்கள் என பொலிஸ் போக்குவரத்து பிரிவுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இந்திக்க ஹப்புகொட எச்சரித்துள்ளார். பாதசாரிகள் நடக்கும் வழியில் வாகனங்களை நிறுத்தும் சாரதிகளுக்கே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். (ஜ-4)

## தீப்பற்றிய கப்பலில் டீசல் கசிவு

(கொழும்பு)

கிழக்குக் கடற்பகுதியில் தீப்பற்றிய எண்ணெய்க்-கப்பலில் இருந்து டீசல் கசிவு ஏற்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார். எண்ணெய்க் கப்பலைச் சுற்றி, ஒரு கி.மீ தூரம் வரையான கடற்பகுதியில் டீசல் படிமங்கள் நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மத்தள விமான நிலையத்தில் தரித்து நின்று, தீயணைப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் இந்திய கடலோரக் காவல்படையின் டோனியர் கண்காணிப்பு விமானமே இந்த டீசல் கசிவை கண்டுபிடித்துள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 140 | 200 |
| தக்காளி | 150 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 130 | 150 | 130 | 140 |
| கரட் | 80 | 180 | 160 | 160 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 70 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 200 | 280 | 240′ | 240 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 180 | 180 | 140 | 200 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 280 | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 160 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | - | 240 | - | - |
| வெங்காயப்பூ | 240 | 220 | - | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | - | - | 100 |




# யானை பல் விளக்குமா?

பாபு என்ற சிறுவன் ஐந் தாவது படித்து வந்தான். புத் தக மூட்டையுடன் பள்ளிக்குப் புறப்பட்டான். "ஏண்டா இன் றைக்கு குளிச்சியா"என்றாள் பாபுவின் அம்மா.

நேரமாச்சும்மா. நாளை க்கு குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான். பல நாட்கள் பாபு பல் விளக்கா மலேயே பள்ளிக்குப் போவான்.

அப்போது பையன்கள் இவ னிடம் கேட்டால் யானை பல் விளக்குகிறதா? என்று கிண்ட லாகப் பதில் சொல்வான். வகு ப்பில் பாபுதான் முதல் மாண வன். பாபுவின் அம்மாவிற்குப் பெருமையாக இருந்தது.

வகுப்பிற்குள் நுழைந்த ஆசிரியர் பாபுவிடம் "ஏன் அழுக்கு சட்டையுடன் வந் திருக்கிறாய் என்று கேட்டார். "மறந்திட்டேன் சேர்" என்றான் பாபு.

படிப்பில்கெட்டிக்காரனாக விளங்கிய பாபு ஏனோ தன் னைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்ட வில்லை. அதனால் பையன் கள் இவனை "அழுக்குமாமா" என்று அழைத்தனர்.


பாபுவின் அம்மாவும் வகு ப்பு ஆசிரியரும் பலமுறை கூறியும் அவன் தன்னை மாற் றிக் கொள்ளவில்லை. அவன் கவனம் முழுவதும் படிப்பி லேயே இருந்தது.

அரையாண்டுத் தேர்வு வந் தது. பாபு முதல் மார்க் வாங்க வேண்டுமென்று விழுந்து விழுந்து படித்தான். பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது.

அப்போது பாபுவுக்கு திடீரெ ன்று பல்வலி வந்தது. பாபு வின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய் தார்கள். எதுவும் சரியாகவி ல்லை.

விடிந்தால் அரையாண் டுத் தேர்வு. பாபு புலம்பிக் கொண்டே இருந்தான். அவ னால் வலியைத் தாங்க முடிய வில்லை.

பின்பு பாபுவை அரச வைத் தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்த னர்.



பாபு அரையாண்டுத் தேர் வுக்குபோக முடியவில்லையே என்று அழுது கொண்டிருந் தான். தினந்தோறும் பற்களை சுத்தம் செய்திருந்தால் பல் வலியே வந்திருக்காது என் றார் டாக்டர். பாபுஒருவாரம் வைத் தியசாலையில் இருந்தான்.

அரையாண்டுத் தேர்வு முடிந்து பள்ளிக்கூடம் திறந் தது.அன்று வகுப்பில் ரேங்க் கார்டு கொடுக்கப்பட்டது. முதல் மார்க் ராஜா என்று ஆசிரியர் பெயரைப் படித்தபோது பாபு தேம்பி அழுதான்.

ஆசிரியர் அவனை சமா தானப்படுத்தினார். "சுவரை வைத்துதான் சித்திரம் எழுத வேண்டும்.நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடி யும்" என்றார். பாபு மௌன மாக இருந்தான்.

அடுத்தநாள் அவன் பள் ளிக்கு "பளிச்" என்று வந் தான். "அழுக்குமாமா இப்போ உஜாலாவுக்கு மாறிட்டாண்டா" என்று ஒருவன் சொல்ல அனைவரும் சிரித்தனர். பாபு வுக்கும் சிரிப்பு வந்தது.

**நீதி: சுத்தமாக இருந் தால்தான் படிப்பில் முன் னேற்றம் காட்ட முடியும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு


## கலாரசிகனின் கலைக்கோயில்

ஒப்புயர்வற்ற கலை ஞர்கள், அக்கலைஞர் களைப் போற்றி வளர்த்த அரசர்கள் கலைகளையும் கலைஞர்களையும் கொண் டாடிய பொதுமக்கள் என்று கலையின் வளர்ச் சியில் சோழர் சமூகத்தி னருக்குப் பங்கிருந்தது.

பெரியகோயிலின் கட்டு மானப் பணி கி.பி.1010 இல் அதாவது ராஜராஜன் ஆட்சிக்கு வந்த 25 ஆம் ஆண்டின் 275 ஆம் நாளில் கட்டி முடிக்கப் பட்டு குடமுழுக்கு நடத்த ப்பட்டது.

ஞானிகளின் ஞானக் கண்களால் காணப்பட்ட கைலயங்கிரியைத் தூலக் கண்களாலும் பக்தர்கள் காணவேண்டும் என்பத ற்காக ராஜராஜன் எடுத்த ஒரு முயற்சி பெரிய கோயில்.

ராஜராஜனின் மேற்பார் வையில் உருவான பெரிய கோயிலின் கட்டுமானம் எப்படி அமைந்தது? பெரிய கோயிலில் எப்ப டிப்பட்ட கலாசாரக் கொண்டாட்டங்களும் வியக்கும்படியான சிற்ப ங்களும் அமைந்தன. பார்ப்போம்.




கல்வெட்டுக்கள்

**கல்வெட்டுக்கள்**

ஓர் அரசின் நிர்வாகம் சரியாக இருக்குமானால் ஆவணங்களும் சரியாக இருக்கும். இதற்கு உதா ரணம் ராஜராஜன் காலத் துக் கல்வெட்டுகள்.

ராஜராஜன் காலத்து சமூக, சமய, இலக்கிய, நிர்வாகச் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளப் பெரிய கோயில் கல் வெட்டுக்கள்தான் உதவி செய்கின்றன.

வரலாற்றில் பெரிய கோயில் பற்றிய விபரங் களும் தன் ஆட்சி குறித்த தகவல்களும் இடம் பெறவேண்டும் என்பதில் முனைப்பாக இருந் திருக்கின்றார் ராஜரா ஜன்.

பெரிய கோயிலின் தேவாரப் பாடல்கள் பாடிய 48 ஓதுவார்க ளுக்கும் உடுக்கை, கொட்டி, மத்தளம் வாசிப் போர் இருவருக்குமாக 50 பேருக்குக் கொடுக்கப் பட்ட நிவந்தங்கள் பற் றிய செய்திகளும் பெரிய கோயில் கல்வெட்டுக்க ளில் பொறிக்கப்பட்டுள் ளன.

இப்படிக் கோயில் கட்டுமான வேலைகளி லிருந்து அதன் ஒவ் வொரு நாள் நடவடிக் கைகளையும் கல்வெட் டில் பதிந்துவிட வேண் டும் என்கிற கவனம் ராஜராஜனிடம் மிக அதிகமாகவே இருந்திருக் கிறது.

பெரிய கோயிலில் உள்ள கல்வெட்டுக்களி லேயே அதிக கவனம் பெற்ற கல்வெட்டு இது.

'ஸர் ராஜராஜீஸ்வரமு டையார்க்கு நாங்குடுத்த னவும் அக்கன் குடுத்தன வும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும்' அக்கன் என்ற சொல் அக்கா (தமக்கை) என்ப தைக் குறிக்கும். பெண் டுகள் என்றால் அவரு டைய மனைவியர். திரும ஞ்சனச்சாலை என்பது நீராடும் இடம்.

ராஜராஜன் நீராடு மிடத்தில் கூறியதைக் கல்வெட்டில் பொறித் திருக்கிறார்கள். அப்படி என்ன சொல்கிறார் ராஜ ராஜன்.

(தொடரும்)

வாழ்க்கையின் வசந்தகாலம் துன்பத்தின் துவக்கத்தில்தான் உண்டு. துன்பத்தைக் கண்டு ஓடுபவன் அறிவில்லாதவன். – பீல்ட்மேன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலம் என்பது தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம்

காலம் என்ற தமிழ்ச் சொல் மிகப் பெறுமதியானது மட்டுமன்றி, அனைத்துத் தமிழ் மக்களாலும் உச்சரிக்கப்படுகின்ற ஆற்றுகைச் சொல் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தவிர, காலம் என்பது பலபொருள் தரக்கூடிய ஒரு சொல் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

அந்த வகையில், எமது வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்கள் குறித்து எல்லாம் காலம் என்று கூறிக் கொள்கின்றோம்.

இஃது எழுதப்பட்ட விதிகளின் ஒழுங்கமைப்பைக் குறித்து நிற்கும்.

தவிர, சந்தர்ப்ப சூழல்களின் சாதக பாதகத் தன்மைகளும் காலம் என்ற பொருளை உணர்த்தி நிற்கிறது.

அடுத்தடுத்துத் துன்பம் ஏற்படுகின்றபோது கெடு காலம் என்று கூறி மனம் நொந்து கொள்கிறோம்.

அதேபோல, நன்மையும் வெற்றியும் சேரும்போது காலம் வேலை செய்கிறது என்று காரணம் சொல்கிறோம்.

இவ்வாறு சொல்லப்படுகின்ற காலத்துக்குள் காலனும் அடங்கிக் கொள்கின்றான்.

ஆக, விதிப்பயன் என்பதையும் காலமே தீர்மானிக்கிறது.

இவ்வாறு காலத்தை குறித்துரைத்த நம்மவர்கள் என்ன செய்வது எல்லாம் காலம் செய்த கோலம் என்று கூறி ஆற்றுப்படுத்துவதற்கும் காலம் என்ற சொல்லைக் கையாள்கின்றனர்.

இவ்வாறு காலத்துக்கு விளக்கம் தந்த தமிழ், காலத்தின் பெறுமதியை உணர்த்துவதற்காக;

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்றும் நேரம் பொன்னானது என்றும் ஆகுங் காலத்தே அவை அவை ஆகும். போகும் காலத்தே பொன்பொருள் எல்லாம் போகும் என்றும் விளக்கம் தந்து காலத்தின் அருமையைப் புகட்டினர்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தமிழில் இருக்கக்கூடிய சொற்களில் காலம் என்பதற்கான முதன்மையும் முக்கியத்துவமும் மிக உயர்வானது என்பது இப்போது ஏற்கப்படக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு தமிழில் இருக்கக்கூடிய காலம் என்பதை கவிஞர் கண்ணதாசன் தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம் என்றார்.

ஆம், அர்த்தமுள்ள இந்து மதத்தில் காலம் என்பது தெய்வத்தால் இசைக்கப்படும் இராகம் எனக் கவியரசர் கண்ணதாசன் குறித்து நிற்பதற்குள் நிறைந்த அர்த்தங்கள் புரியப்படுகின்றன.

இராகம் என்பது காற்றோடு கலந்து அண்ட வெளியில் சங்கமமாவது. இசைக்கப்படும் இராகத்தை நிறுத்தி வைப்பது முடியாத காரியம்.

இராகத்தை நிறுத்தி வைப்பதென்றால், அது நிசப்தமான சூழமைவையே குறிக்கும்.

அதிலும் தெய்வத்தால் இசைக்கப்படும் இராகத்தை நிறுத்துவது சாத்தியமற்றது.

எனவே காலம் நமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். அதனைப் பயன்படுத்திக் கொள்வதில்தான் எல்லாம் தங்கியுள்ளது.

ஆகவே, எங்கள் தமிழ் அரசியல் தரப்புகள் காலத்தைப் பயன்படுத்தத் தயாராக வேண்டும்.

காலத்தைக் கடத்திவிட்டு, அழுது புலம்புவதால் ஆகப்போவது எதுவுமில்லை.

# மக்கள் பணத்தை நினைத்தால்போல் கையாள ஜனாதிபதிக்கு யார் அனுமதி கொடுத்தது?

## ஹர்ஷ டி. சில்வா கேள்வி

(கொழும்பு)

**காபந்து அரசாங்கத்தின் ஆட்சியில் மே மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையில் அரசாங்கம் நிதி செலவீனங்களை எந்த சட்ட திட்டங்களுக்கு அமைய கையாண்டது என்றும் மக்கள் பணத்தை ஜனாதிபதி நினைத்தால்போல் கையாள யார் அனுமதி கொடுத்தது என்றும் எதிர்க் கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் கேள்வி எழுப்பினார்.**

இந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலத்திற்கு மாத்திரம் 1021 பில்லியன் ரூபாய்களை கடனாக பெற்றுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான 09 ஒழுங்கு விதிகள், மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் 10 கட்டளைகள் மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி முகாமைத்துவம் பாராளுமன்றத்திடம் உள்ள நிலையில் பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்டம் மூலமோ அல்லது இடைக்கால கணக்கறிக்கை மூலமோ நிறைவேற்றி நிதி அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் குறித்த காலத்திற்கு எவ்வாறு அரச நிதியை கையாண்டது.

இவ்வாறு எந்தவொரு அனுமதியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் எவ்வாறு அரசாங்கம் அரச நிதியை கையாள முடியும்.

சபாநாயகர் நீங்கள் இவற்றை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. ஜனாதிபதிக்கு அரச நிதி விடயங்களை நினைத்தால்போல் கையாள முடியாது. சபைக்கே நிதி அதிகாரம் உள்ளது. இந்த நிதி மக்களின் பணம். மக்களின் பணத்தை ஜனாதிபதியால் நினைத்தால்போல் செலவழிக்க எந்த அனுமதியும் இல்லை.

ஆனால் சபாநாயகரோ வேறு எவருமோ இதற்கு எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. என்ன அடிப்படையில் மக்கள் பணத்தில் கைவைத்தீர்கள். நிதி அமைச்சர் கைச்சாத்திட்ட அனுமதிப் பத்திரம் எங்கே? சபாநாயகர் இதற்கு பதில் தெரிவித்தே ஆகவேண்டும். நீங்கள் என்ன செய்தேனும் இந்த கேள்விகளுக்கு பதில் தெரிவிக்க வேண்டும். ஜனாதிபதி என்ன அதிகாரத்தை கொண்டு நிதி விடயங்களை கையாண்டார்.

அரசியல் அமைப்பில் அவ்வாறு எந்தவொரு சரத்தும் இல்லை. எம் அனைவருக்கும் கடமைகள் உள்ளது. அதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

கொரோனா காலத்தில் நெருக்கடிகள் இருந்தது உண்மையே. அதனை விளங்கிக்கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்காது இருந்தோம்.

ஆனால் பாராளுமன்றத்தில் செய்ய வேண்டிய கடமைகளை நிராகரிக்க முடியாது.

பாராளுமன்றத்தில் இன்னமும் 20 ஆம் திருத்தம் நிறைவேற்றப்படவில்லை. நிதி அதிகாரம் இன்னமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது. எனவே அரசாங்கம் பதில் கூறியாக வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

பூநகரி முக்கொம்பன் பகுதியில் நேற்று முன்தினம் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 11 லீற்றர் கசிப்பும் அதே பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரிடமிருந்து 5லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

விசாரணையின் பின் சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பூநகரி பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நாம் வாழ்வதற்கு நன்றாக இருக்க வேண்டியவை மூன்று. அவை நம் உள்ளம், உடம்பு, சுற்றுப்புறம். -டாக்டர் மு.வரதராசனார்

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** ஆண்டியப் புளியங்குளம், பூவரசங்குளத்திலிருந்து வாரிக்குட்டியூர் வரை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கறகிடந்தகுளம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### மௌனம் நல்ல பழக்கம்



❖ உங்கள் மனதை மலராக்கிக் கொள்ளுங்கள். அதிலிருந்து நறுமணம் நாலாபுறமும் மௌனமாகப் பரவட்டும்.

❖ கண்ணை இமை காப்பது போல கடவுள் நம்மை எந்நேரமும் காத்தருள்கிறார் என்பதை பூரணமாக நம்புங்கள்.

❖ அன்பே சிவம். சிவமே அன்பு. அன்புள்ள இடத்தில் ஆண்டவனின் அருளாட்சி நடக்கிறது.

❖ "தான்" என்னும் எண்ணம் கடவுளைச் சரணாகதி அடைவதற்கு மிகப் பெரிய தடையாகும்.

❖ மௌனமாக இருப்பது நல்லது. ஒரேயடியாக அது முடியாவிட்டாலும், பேச்சில் நிதானத்தையாவது பின்பற்றுங்கள்.

❖ சிதறிக்கிடக்கும் மனதை ஒருமுகப்படுத்தும் சக்தி தியானத்திற்கு உண்டு. அலைபாயும் மனம் தியானத்தால் கட்டுப்படும்.

❖ நல்ல செயல்களை இன்றே செய்யத் தொடங்குங்கள். கடவுளின் அருளால் தக்க சமயத்தில் தேவையான உதவிகள் நிச்சயம் கிடைக்கும்.

❖ எந்த விடயமும் காய் நிலையிலேயே இருப்பதில்லை. பொறுமையும், விடாமுயற்சியும் இருந்தால் காயும் ஒருநாள் கனிந்துவிடும்.

# 2021இல் டோக்கியோ ஒலிம்பிக்

## ஐ.ஓ.சி.முடிவு



கொரோனா வைரஸ் தொற்று உலகில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் 2021 ஆம் ஆண்டில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது உறுதி என சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக விருந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா அச்சம் காரணமாக அடுத்த ஆண்டு வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி தொடங்கும் "என்று டோக்கியோ விளையாட்டுக்கான ஐ.ஓ.சியின் ஒருங்கிணைப்பு ஆணையத்தின் தலைவர் கோட்ஸ் தெரிவித்துள்ளார்.

உலகப் போர்கள் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் ஒருபோதும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் இரத்துச் செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜப்பானின் எல்லைகள் இன்னும் பெரும்பாலான வெளிநாட்டு பார்வையாளர்களுக்கு மூடப்பட்டுள்ளன. அத்துடன் கொரோனா வைரஸிற்கான தடுப்பூசியை கண்டுபிடிப்பதற்கு சில மாதங்கள் அல்லது வருடங்கள் ஆகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படுவது சாத்தியமா? என்று சர்வதேச ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

எனினும் ஜப்பானிய அதிகாரிகள் இரண்டாவது முறையாகவும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை தாமதப்படுத்த போவதில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளனர். (4)


அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# இத்தனை வருடத்தில் டோனியிடம் இதை நான் பார்த்ததேயில்லை

## இர்பான் பதான்



இந்திய அணியின் முன்னாள் வீரரான இர்பான் பதான், பயிற்சியின் போது டோனி விக்கெட் கீப்பிங் செய்து நான் பார்த்ததேயில்லை என்று கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இன்னும் சில நாட்களில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பதற்காக, வீரர்கள் அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி சென்னை அணி, தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வீரர்கள் பயிற்சி செய்யும் வீடியோவை பதிவிட்டது.

இந்த வீடியோவைக் கண்ட இந்திய அணியின் முன்னாள் வீரர் இர்பான் பதான், பொதுவாக டோனி எப்போதும் பட்டிங் பயிற்சி செய்வதையே அதிகம் பார்த்திருக்கிறேன்.

ஆனால் இம்முறை வலைப் பயிற்சியில் அவர் கீப்பிங் பயிற்சியை மேற்கொண்ட வீடியோவை நான் பார்த்தேன். நான் அவருடன் பல ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடி உள்ளேன்.

ஆனால் இப்படி ஒரு காட்சியை நான் இதுவரை கண்டதே இல்லை. எனக்கு மிகவும் புதிதாக இருந்தது. அவர் ஒருபோதும் கீப்பிங் பயிற்சி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை.

ஆனால் இம்முறை அவர் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அதற்கு காரணம் யாதெனில் ஒரு வருடத்திற்கு மேலாக டோனி விளையாடவில்லை என்பதால் கூட இருக்கலாம்.

அதுமட்டுமன்றி, புதிய பவுலர்களை அவர் சந்திக்க இருப்பதாலும், புதிய இடம், புதிய சூழ்நிலை என்ற காரணத்தினாலும் கீப்பிங் பயிற்சியில் இறங்கியிருக்கலாம் என்றும் கூறியுள்ளார். (4)

# கரீபியன் பிறீமியர் லீக் அரையிறுதி நேற்று ஆரம்பம்

இருபது - 20 கிரிக்கெட்டின் அதிரடி ஆட்டத்துக்கு புகழ் பெற்ற மேற்கிந்திய கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி நேற்று ஆரம்பமாகியது.

மேற்கிந்திய தீவுகளின் சகலதுறை அதிரடி ஆட்டக்காரர் கிரேன் பொல்லார்ட் தலைமையிலான ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியும் றோமன் பவல் தலைமையிலான ஜமைக்கா தலவாஸ் அணியும் மோதின.

இந்த தொடரில் இன்னமும் வீழ்த்தப்படாத அணியாக உள்ள பொல்லார்ட்டின் அணி மீதான எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ள நிலையில் எதிர்வரும் ஐ.பி.எல். போட்டிகளிலும் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக பொல்லார்ட் விளையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (4)

# நொதேன் பிறீமியர் லீக்- 2k20
# கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- வல்வை றைனோஸ் எதிர் சங்கானை றொப் 11
- சங்கானை றொப் 11 - 51/10
- வல்மை றைனோஸ் - 52/03
- வல்வை றைனோஸ் 7 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்டநாயகன் - டெஸ்மன் - 3 விக்கெட்டுக்கள்

- நோ நேம் கிரிக்கெட் கிளப் எதிர் ஊரெழு றோயல்ஸ்
- ஊரெழு றோயல்ஸ்- 76/09
- நோ நேம் கிளப் - 81/6
- நோ நேம் கிளப் 4 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்டநாயகன் - பிரகாஷ் - 33 ஓட்டங்கள்





- சங்கானை றொப் 11 எதிர் ஊரெழு றோயல்ஸ்
- ஊரெழு றோயல்ஸ் - 49/9
- சங்கானை றொப் 11 - 54/1
- சங்கானை றொப் 9 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்டநாயகன் - சதீஸ் 27 ஓட்டங்கள்

- சாவா ஸ்பாட்டன்ஸ் எதிர் நோ நேம் கிளப்
- சாவா ஸ்பாட்டன் - 91/7
- நோ நேம் கிளப் - 93/5
- நோ நேம் கிளப் 5 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்டநாயகன் - விமல்ராஜ் - 26 ஓட்டங்கள்



## யாழ்ப்பாணத்தில்...

நேற்றுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

240 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 2 பேரும் 55 கிராம் 300 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த 4 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டனர். (ம-3,8)

## யாழ்.நோக்கி...

ஆரம்பமாகி யாழ்.நல்லூரை சென்றடைவதற்கான ஏற்பாடுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணி செய்து வருகின்றது.

கடந்த வருடமும் இவ் நடைபயணம் இடம்பெற்ற நிலையில், இரண்டாவது தடவையாக இவ் ஆண்டும் இவ் நடைபவனியை மேற்கொள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியினர் அனுமதி பெறுவதற்காக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது நடைபவனிக்கு அனுமதி தரப்படமாட்டாது எனவும், தடைன்ய மீறி நடைபவனி மேற்கொண்டால் கைது செய்யப்படுவீர்கள் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-3,250,299)

## பெண் ஒருவர்...

பட்டிருந்த பெண் ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

48 வயதுடைய இந்தப் பெண் தப்பிச் சென்றமை தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பெண் மதிலில் இருந்து பாய்ந்து முச்சக்கர வண்டி ஒன்றில் ஏறி தப்பிச் சென்றுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது. (ம-3)

## கடன்களை வழங்...

களை கடைப்பிடிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று அரச வங்கிகளின் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற நிதி அமைச்சின் முன்னேற்ற மறுஆய்வுக் கூட்டத்தின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கடனை மீளச் செலுத்துவதற்கு முடியாத மற்றும் புதிதாக கடன் பெறுவதற்கு வரும் பொதுமக்களை வங்கி நடவடிக்கைகளின்போது தேவையற்ற சிரமத்திற்கு உட்படுத்த வேண்டாம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (ம-3)

## யாழ்.நாவற்குழி...

விகாரை அமைப்பதில் எழுந்துள்ள சர்ச்சைகளை மக்களும் அரசியல்வாதிகளும் மறந்த நிலையில் புதிதாக கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டுள்ளது. (ம-3)

## மூன்று கஞ்சா...

கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து பருத்தித்துறை பகுதியில் நேற்றிரவு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 பார்சல்கள் அடங்கிய கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா பருத்தித்துறை மதுவரி நிலையத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ம-3,60)

## கஞ்சா யாழில்...

பட்டது.

இந்த கஞ்சா போதைப்பொருள் சந்தேக நபர்கள் எவருமின்றி கைப்பற்றப்பட்டதாகும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் விசேட அனுமதியுடன் மல்லாகம் நீதிமன்ற நீதிபதிகள் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, ஏ.ஏ.ஆனந்தராஜா, காங்கேசன்துறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் கமல் அபயசிறி, மல்லாகம் நீதிமன்றின் பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் பிரசன்னத்துடன் இந்த சட்ட விரோத போதைப்பொருட்கள் எரித்து அழிக்கப்பட்டன. (ம-3)

## தமிழர் விவ...

கூடாது என்று பயமுறுத்தியமையை பாராளுமன்றத்தில் கடுமையாக விமர்சனம் செய்துள்ள யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இதனால்தான் தமிழ் மக்கள் காணி அதிகாரம் தமது கைகளில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைக்கு காணி அதிகாரங்கள் கொடுக்கக் கூடாது என்று எம்மவர் சிலர் கூறி வருகின்றார்கள். இந்த விடயத்தை அவர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். எங்கிருந்தோ வந்த ஒரு புத்த பிக்கு எமது மக்களைத் தமது பாரம்பரிய காணிகளில் தமது பாரம்பரிய தொழிலை நடத்த விடாது தடுக்கின்றார் என்றால் காணி அதிகாரம் எமக்கு இருக்கக் கூடாதா?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

திரியாயில் தமிழ் மக்கள் விவசாயம் செய்வதற்கு தடைசெய்யப்பட்ட இடங்களில் இருப்பதாக கூறப்படும் தொல்பொருள்ஆராய் விடங்கள் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடமா? சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த இடமா? என்று கூட இதுவரையில் ஊர்ஜிதப்படுத்தவில்லை என்று குறிப்பிட்ட விக்னேஸ்வரன்,

அதனால்தான் வரலாறு தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு வரலாற்று ஆய்வாளர்களை கொண்ட ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாக கூறினார்.

"இவை தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களென்றால் அவற்றைப் பாதுகாக்கும் கோரிக்கை தமிழ் மக்களிடம் இருந்து வரவேண்டுமேயொழிய சிங்களவரை மட்டும் உள்ளடக்கிய செயலணியில் இருந்து வரக்கூடாது.

ஆகவே தான் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் வேற்று நாட்டு தென்னாசிய வரலாற்று வல்லுநர்களைச் சேர்த்து ஆணைக்குழுவொன்றை கூட்டி சிங்கள மொழி பேசுவோர் பற்றிய முழுவிபரங்களைச் சேகரிக்கச் சொல்லியுள்ளேன். பௌத்தர்கள் என்றவுடன் அவர்கள் சிங்களவர்களே என்று எண்ணுவது மடமை" என்று அவர் கூறினார். (ம-3)

## சபா...

ஹன்னா சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி ரொபேர்ட் ஜூஹாம் ஆகியோர் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தனர்.

விசேட விருந்தினருக்கான அறையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## வடக்...

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற உற்பத்தி வரிகள் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"செவ்வி ஒன்றில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், மகாவம்சத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனக் கூறியுள்ளார். அவர் மகாவம்சத்தை ஏற்றுக் கொள்கிறாரா? இல்லையா? என்பது எமக்கு முக்கியமில்லை.

ஆனால், வடக்கில் புத்தர் சிலைகளை வைக்க வேண்டாம் என்று கூறுவதற்கு அவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதால் நாட்டின் நாலாபுறங்களிலும் புத்தர் சிலையை வைத்து வழிபடும் உரிமை எமக்குள்ளது" என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே குறிப்பிட்டார். (ம-3)

## சரத் வீரசேகர...

இந்த நிலையில் அவருடன் இந்த விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக இந்திய அரசாங்கம் அவசர அழைப்பு ஒன்றை விடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்துவரும் சில தினங்களில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அவர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**செவன**
திகதி 09/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 294
C 29 32 48 69

**மெகா பவர்**
திகதி 09/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0607
A 26 06 12 13 18

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 09-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2535
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 53 57 61 79

**மஹஜன சம்பத**
திகதி 2020/09/09
சீட்டிழுப்பு இலக்கம் 4240
Z 2 3 2 1 8 2

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 09-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 1053
B 2 5 1 0 1 4

**ஜயோதா Jayoda**
சீட்டிழுப்பு வாரம் 1688
சீட்டிழுப்பு திகதி 09/09/2020
வெற்றி இலக்கங்கள் 07 31 35 43
ஆங்கில எழுத்து A
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பெறுதி ரூ. 53,384,232
Web: www.dlb.lk

**அத கோடிபதி ADA KOTIPATHI**
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1036
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.09.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,282,505/-
வெற்றி இலக்கங்கள் 07 12 39 48 K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2169
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 786

**சனிதா**
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.09
சீட்டிழுப்பு இல.: 3366
வர்ணம்: ஊதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,992,264.50
வெற்றி இலக்கங்கள் 31 34 60 64 D
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 6532

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1210
சீட்டிழுப்பு திகதி 09.09.2020
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Z 17 21 59 66
55,115,216.40
SUPER 500 3 6 6 2

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 09.09.2020
வெற்றி வாரம் 2917
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 27 31 40 57
மிதுனம்
ரூ.500 பரிசுக்குரிய 2312
ரூ.100 பரிசுக்குரிய 112
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,403,214

## வேலையாட்கள் தேவை

பில் கிளார்க்,
விற்பனையாளர், கணக்காளர்
(ஆண், பெண்). (3843)

**பேப்பர் கவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## பணியாளர் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள
ஸ்ரூடியோ ஒன்றுக்கு Computer
அனுபவமுள்ள வேலையாட்கள்
(ஆண், பெண்) தேவை.
நேரில் வரவும். (3845)

309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 716 2339

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது
(இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-2224)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-112)
0768226240

## NCG EXPRESS

காணொளி வசதியுடன்
கூடிய அதிசொகுசு பேருந்து
தினசரி காலை நேர சேவை

பானந்துறை - காங்கேசன்துறை 15



**பயண தொடக்க நேரம் (பானந்துறை)**

| | |
|---|---|
| பானந்துறை | மு.ப. 9.00 |
| சொய்சாபுர | மு.ப. 9.30 |
| வெள்ளவத்தை | மு.ப. 10.15 |
| புறக்கோட்டை | மு.ப. 11.00 |
| அம்பேபுஸ்ஸ | பி.ப. 12.00 |
| குருணாகலை | பி.ப. 01.15 |
| தம்புள்ளை | பி.ப. 02.15 |

**பயண பாதை**
பானந்துறை, சொய்சாபுர, வெள்ளவத்தை, புறக்கோட்டை, கடவத்தை, நிட்டம்புவ, அம்பேபுஸ்ஸ, குருணாகலை, தம்புள்ளை, மிகிந்தலை, மதவாச்சி, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை.

**பயண தொடக்க நேரம் (காங்கேசன்துறை)**

| | |
|---|---|
| காங்கேசன்துறை | மு.ப. 9.15 |
| யாழ்ப்பாணம் | மு.ப. 10.15 |
| கிளிநொச்சி | மு.ப. 11.45 |
| வவுனியா | பி.ப. 1.00 |

**பயண பாதை**
காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா, மதவாச்சி, மிகிந்தலை, தம்புள்ளை, குருணாகலை, அம்பேபுஸ்ஸ, நிட்டம்புவ, கடவத்தை, புறக்கோட்டை, வெள்ளவத்தை, சொய்சாபுர, பானந்துறை.

குளிர்சாதனப் பெட்டி சரிசெய்யக்கூடிய இருக்கைகள்,
USB சார்ஜர் மற்றும் இன்னும் பல வசதிகளுடன். (3806)

பானந்துறை முதல் காங்கேசன்துறை வரை
ஆசனப் பதிவுகளுக்காக
077 107 5555

காங்கேசன்துறை முதல் பானந்துறை வரை
ஆசனப் பதிவுகளுக்காக
077 555 1533

இணையத்தளம் மூலம் ஆசனப்பதிவுகளுக்காக
www.ncgexpress.com

ncgexpress@gmail.com

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L 2020 தொழில்நுட்ப பிரிவு**

**மாபெரும் விசேட செயலமர்வு**

**பொறியியல் தொழில்நுட்பம்**
அருண், சிவஜன், நிசாந்தன், கேதீஸ்

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்**
திருக்குமரன், நிறோசன், ஜெயந்தன், சிவகுமார்

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
சக்தி, ராகவன், முருகநிரோஜன், லவன் (C-277)

திகதி - 09-12,12-15,25-27
ஆரம்பம் 10.09.2020 (8am - 2.30pm)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்

**Door to Door Delivery**



சுகாதாரமாக தயாரிக்கப்பட்ட
அறுசுவை உணவுகள்
Hygienically Made tasty Food

ஒடியல் கூழ் முதல்
புரியாணி, பிறைட் றைஸ்,
யாழ், மதிய இரவு
நேர உணவுகள்

கொத்துரொட்டி, புட்டு
இடியப்பம், அப்பம், பராட்டா
என பலவகை.

VISA MasterCard AMERICAN EXPRESS UnionPay




077 734 0026
021 222 6868

**Virounthu @ Yarl Pardy**
யாழ்பாடி

49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.

Any Time Including Curfew
தங்கும் அறைகள், உணவகம் / Rooms & Restaurant
(C-266)

## உணவக விடுதி
## சமையல் வெற்றிடங்கள்

யாழ். நல்லூரில் இயங்கும் அதி உயர்தர உணவக விடுதிக்கு கீழ்க்காணும் உணவு தயாரிப்பிற்கு தகுதி வாய்ந்தவர்கள் உடனடியாகத் தேவை.

- யாழ். உணவு வகை தயாரிப்புகள்.
- யாழ். சிற்றுண்டி வகைகள்.

**சிற்றுண்டிகள்.**
- றோல்ஸ் / கட்லட்ஸ் மற்றும் இதர வகைகள்.
- அப்பம், தோசை, இட்லி போன்ற உணவு வகைகள்.
- பழரச தயாரிப்புகள் (Juice).

- உணவு பரிமாறுபவர்கள்.
- உணவு விநியோகிப்பவர்கள்.
- சுத்திகரிப்பாளர்கள்.



(C-266)

போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ளவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு நேரடியாக சமூகம் தரவும்.

சம்பளம் மற்றும் உதிரிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

**யாழ்பாடி**
49 - 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக.)
Tel : 021 222 6868, 077 734 0026


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.